Poovarasu

# பூவரசு



மார்கழி 1995

அடுத்த இதழ்.

# பூவரசு

ஐந்தாவது ஆண்டு மலர்.

வழக்கம்போல் – வண்ண முகப்புடன்
அதிகபக்கங்களில்
தரமான ஆக்கங்கள் பலவற்றைத் தாங்கி
வெளிவருகிறது.

பூவரசு ஐந்தாவது ஆண்டு நிறைவுப்போட்டிகளில்
முதற்பரிசுகளைப்பெற்ற ஆக்கங்களுடன் –

பூவரசு இனிய தமிழ் ஏட்டின்
முன்னணி எழுத்தாளர்களோடு
புதிய எழுத்தாளர்கள் பலரினதும் ஆக்கங்களும்
இம்மலரை அலங்கரிக்கின்றன.

*பூவரசு வளரத் தங்கள் படைப்புக்களையும்
உற்சாகத்தையும் வழங்கிய- வழங்கிவரும்
அனைத்து படைப்பாளர்களுக்கும் -வாசகர்களுக்கும்
பூவரசு தன் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு
எதிர்வரும் காலங்களிலும் தன் கலை இலக்கியப்பணியைத்தொடர
உங்கள் அன்போடிணைந்த ஆதரவை எதிர்நோக்குகிறது.*

**உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம்சொந்தம்**

இனிய தமிழ் ஏடு.

*இந்த இதழில்...*

இந்துமகேஷ்
வீ.ஆர்.வரதராஜா
ப.இராஜகாந்தன்
வேலணையூர் பொன்னண்ணா
இ.சம்பந்தன்
எஸ்.ஆர்.நிஸ்தார்
க.அருள்நாதன்.
எழிலன்
கே.ஆர்.டேவிட்.
க.ஸ்ரீதாஸ்.
வை.யோகேஸ்.

Poovarasu
TAMILISCHE KULTUR MAGAZIN

**இதழ்: 36**
**மார்கழி 1995**
December 95

இனிய தமிழ் ஏடு.

Poovarasu
Sinniah Maheswaran
Otto Brenner Allee-56
28325 Bremen
Germany

**உலகமே நம் இல்லம்.**
**உள்ளமெல்லாம் நம் சொந்தம்.**

# ◆ வானுறையும் தேவனவன் வந்தான் இம்மண்ணுக்கு ◆

(குறுங்காவியம்)

–இந்துமகேஷ்.

வானுறையும் தேவனவன் மானிடனாய் உருவெடுத்து
பூமிக்கு வந்த கதை புதிதல்ல நமக்கெல்லாம்.
என்றைக்கோ இவ்வுலகைப் படைத்திட்ட நம் இறைவன்
இன்றைக்கும் அன்றைக்கும் என்றைக்கும் வாழ்கின்றான்
ஆதாமும் ஏவாளும் ஆக்கிவைத்த சந்ததியில்
வந்து பிறந்தோம் நம் பாவங்கள் தொலையவில்லை.

பாவங்கள் தீர்த்து அன்புப் பாதையிலே நமை அழைத்து
வேதங்கள் சொல்லி விண்ணுலக வாழ்வு தரப்
பாலகனாய் எங்கள் பரமன் பிறந்து வந்தான்.
ஏசு அவன் நாமம் எப்போதும் இறைவனது நேச குமாரன்
நினைப்போம் அவன் கதையை!

அழகுமிகு உலகத்தை ஆக்கி வைத்தான் நம் இறைவன்
அனுபவித்து மகிழ்வதற்கு ஆயிரமாய் இன்பங்கள்
கொட்டிக்கொடுத்து குவலயத்தில் மனிதர்தமை
விட்டுவைத்தான் ஆனால் நாம்
தொட்டதெல்லாம் துன்பங்கள் தொடர்வதெல்லாம் வேதனைகள்
பட்டுப் பரிதவித்துப் பாரினிலே அலைகின்றோம்
பாவங்கள் தீர்வதற்குப் பாதையினைத் தேடுகிறோம்.

பாதையது ஒன்றுண்டு பாரினிலே நமைப்படைத்த
தேவனவன் திருவடியைத் தினம்தோறும் பணிவதுதான்
பாவத்தைத் தீர்க்கும்வழி பாங்கான இலகுவழி.
எத்தனைபேர் அதை அறிவோம்....
சத்தியத்தைக் கண்டடைவோம்?

'எங்கே கடவுள்?' என்று இன்றைக்கும் கேட்கின்றார்
'இங்கே நான் இருக்கின்றேன்!' என்றிறைவன் சொன்னாலும்
நம்பாத மானிடர்கள் நமக்குள்ளே எத்தனைபேர்?

இன்றைக்கு மட்டுமல்ல அன்றைக்கும் இதே கதைதான்....

வானத்துத் தேவனவன் மானிடர்க்கு வாழ்வு தர
பூமிக்கு வருவதற்குப் புதுநேரம் பார்த்திட்டான்
கற்போடு பண்போடு கருணைநிறை நெஞ்சோடு
வாழ்கின்ற மங்கையர்கள் வரிசையிலே ஒருதாயைத்
தேடி அவன் வந்தான். திருமணத்தைக் காணாத
கன்னி மரியாளின் கர்ப்பத்தில் குடி கொண்டான்..

கன்னி மரியாளைக் கணவனாய்க் கரம்பற்றி
வாழ்வதற்கு வந்த மானிடன் யோசப்பு
கர்த்தரின் எண்ணத்தைக் கனவிலே கண்டு கொண்டான்...
கன்னி மரியாளைக் கலவாமல் அன்போடு
காதல் மணம் கமழக் காத்திருந்தான்
[illegible] ...!

யூதேயா நகரிலுள்ள பெத்லகேம் நகரில் ஒருநாள்
ஓர் அந்திப் பொழுது....

மரியாள், —
(பிரசவவேதனையுடன்)
வலிதாள முடியவில்லை யோசப் — தேவன்
வரும்வேளை இதுவோ?

யோசப்பு, —
(ஆதரவாக)
பொறு மரியாள்.... ஒரு மறைவிடம்
தேடி வருகிறேன்....

(முன்னால் போய் எதிர்ப்படுவோரிடம்)
நாசரேத் நகர்விட்டு நானும் என் மனையாளும்
குடிமதிப்பு எழுதுதற்காய் பெத்லகேம் நகர் வந்தோம்
சத்திரத்துத் திண்ணையிலே தங்கி இருக்கின்றோம்....
பிரசவவலி கொண்டு என்மனையாள் துடிக்கின்றாள்
தங்குதற்கு சிறுபொழுது இடம்தந்தால் பேருதவி....

ஒருத்தி, —
சேச்சே...போ!
நான் யாரோ நீ யாரோ... நமக்குள்ளே உறவென்ன...?
சத்திரத்துத் திண்ணையிலே தலைசாய்த்துப் படுத்திட்டால்
பிள்ளை பிறக்காதோ.. பிறகெதற்கு வீடுனக்கு?

யோசப்பு, —
ம்.... நானும் மனிதன்தான் மனிதனைத்தான் தேடுகிறேன்....

மரியாள், —
(வலியுடன்) யோசப்....யோசப்....

யோசப்பு, —

துன்பம் புரிகிறது கொஞ்சம் பொறு மரியாள்
தஞ்சம் அளிக்க ஒரு தாயுள்ளம் இருக்காதா?

இன்னொரு பெண், —

ஏனில்லைத் தம்பி...நானும் ஒரு தாய்தான்....
ஆனால் எனக்கென்று வீடேதும் கிடையாதே...

யோசப்பு, —

உலகம் இதுதானே....
உள்ளவர்க்கு மனம் இல்லை....
இல்லாத கையர்க்கோ ஏராள மனம் உண்டு....!

மரியாள், —

யோசப்......யோ....ச....ப்.....

பெண், —

பெண்ணாகப் பிறந்தாலே பெரும்பாரம்
(மரியாளை அணைத்தபடி யோசப்பிடம்)
தம்பி நீ இங்கே வா
நேரத்தைப் போக்காதே...
நெஞ்சத்தில் கருணையிலார் கொஞ்சமும் இரங்கார்கள்
இப்போதைக்கென்ன ஒரு மறைவிடம் தான் தேவை...
அங்கே பார் ஒரு தொழுவம்
அதுவும் ஓர் மறைவிடம்தான்!

(மரியாளை அணைத்தபடி மாட்டுத் தொழுவத்துக்குள்
அழைத்துச் செல்கிறார்கள்)

யோசப், —

(தனக்குள்)
மாட்டுத் தொழுவத்தில் வைக் கோல் படுக்கையிலே
மன்னா நீ பிறப்பதற்கோ நாள் குறித்தாய்?

உலகமெலாம் நீ அமைத்தாய்
உயிர்களெல்லாம் நீ படைத்தாய்....
மேலான தேவன் நீ...மிகு ஏழ்மைக் கோலத்தில்
மானிடனாய் எங்கள் மைந்தனாய் வருவதும் ஏன்?
உன்னை அறிந்தும் உணர்வில்லா மந்தைகளாய்
வாழ்கின்ற மானிடரின் மயக்கம் கலைப்பதற்கோ?
தன்னைக் கொடுத்து நல் சத்தியத்தைக் காப்பவர்கள்
உன்னையடைந்து உய்வர் எனச் சொல்லுதற்கோ?
ஏனென்று அறியேன் நான் எங்கள் குலக்கொழுந்தாய்
வருவேன் எனச்சொன்ன வாய்மொழியே போதுமையா!

(குழந்தையின் அழுகுரல் கேட்கிறது)

ஓ...ஜீஸஸ்

2.

(ஆடுகள் மெல்லிதாய்க் கத்தும் ஓசை.
மேய்ப்பர்கள் மூவர். இருவர் விழித்திருக்க ஒருவன் தூங்குகிறான்)

**முதலாமவன், —**
இங்கேபார் தூக்கத்தை....
இவனெல்லாம் ஒரு மேய்ப்பன்.....

**இரண்டாமவன், —**
சும்மாபோ...அவன் மந்தை சொல்வதெல்லாம் கேட்குதுகள்
கட்டி உணவளித்தால் கத்தாமல் நிக்குதுகள்...
எங்களதைப்போல இடறுகிற ஆடுகளா?

**முதலாமவன், —**
என்றாலும் மேய்ப்பர்கள் இப்படித் தூங்குவதா?
தட்டி எழுப்பு....

**இரண்டாமவன், —**
ஏய்.....ஏய்....ஏய்.....(தட்டுதல்)

**மூன்றாமவன், —**
(தூக்கக் கலக்கத்துடன்)
என்னடா.... சும்மா ஏன் என்னைத் தட்டுகிறீர்...?

**முதலாமவன், —**
மந்தையைக் காக்க வந்து வாய்பிளந்து தூங்குகிறாய்....

**இரண்டாமவன், —**
நாய்நரி வந்தால்....?

**மூன்றாமவன், —**
என் ஆடு உன் ஆடு போலில்லை
என் ஆடு தூங்காமல் தானே விழித்திருந்து தனைக்காக்கும்!

(தேவதூதன் வருகை)

**மூவரும், —**
என்ன அது புதுச்சத்தம்?
புயலோ....புதுக்காற்றோ...?

**முதலாமவன், —**
புரியவில்லை...

**இரண்டாமவன், —**
அங்கே பார்!

**தேவதூதன், —**
அச்சப்பட வேண்டாம்...

மூன்றாமவன், —
ஐயோ கதைக்கிறதே!
முதலாமவன், —
பேயாய் இருக்குமோ?
இரண்டாமவன், —
பிணந்தின்ன வருகிறதோ?
மூன்றாமவன், —
ஆடுகளையெல்லாம் அதற்குக் கொடுப்போமா?
தேவதூதன், —
அச்சப்படவேண்டாம்...கர்த்தரின் தூதன் நான்
எல்லோர்க்கும் ஒரு சேதி இனிப்பான புதுச் சேதி...
மூவரும், —
எங்களுக்கு மட்டுமா?
தேவதூதன், —
இல்லை!... உலகமெல்லாம் இருக்கின்ற மானிடர்கள்
ஆனந்தத்தால் துள்ளி ஆர்ப்பரிக்கும் சேதி அது!
மூவரும், —
என்ன அது...? சொல்லுங்கள்....!
தேவதூதன், —
உங்களுக்கெல்லாம் உய்வு தரும் இரட்சகராய்
கிறிஸ்து எனும்தேவன் உமதூரில் பிறந்திட்டார்....
மூவரும், —
இங்கேயா எமதிறைவன் வந்து பிறந்தார்...?
தேவதூதன், —
மாட்டுத்தொழுவமொன்றில் வைக்கோல் படுக்கையிலே
துணிகளினால் சுற்றி முன்னணையில் கிடக்கின்றார்
அதுவே அடையாளம் அங்கவரைக் காண்பீர்கள்!
(மறைதல்)
முதலாமவன், —
கண்டது நாமென்ன கனவோடா?
இரண்டாமவன், —
இல்லையில்லை....
மூன்றாமவன், —
போயங்கு பார்ப்போம் புறப்படுங்கள்..

(மாட்டுத்தொழுவத்தைத் தேடிவந்து உள்ளே நுழைதல்)

யோசப்பு, —
யார்நீங்கள்?
மூவரும், —
மந்தைகளைக் காத்து வழிநடத்தும் மேய்ப்பர்கள்
யோசப்பு, —
இங்கென்ன தேடிவந்தீர்?

மூவரும், —

வான் வெளியில் ஒருசெய்தி நாம் கேட்டோம்
ஓடிவந்தோம்.

யோசப்பு, —

சேதியா?

முதலாமவன், —

ஆம் ஐயா தேனான சேதி அது...

இரண்டாமவன், —

எங்கள் இறைவன் இங்கு வந்து பிறந்தாராம்!

யோசப்பு, —

சொன்னது யார்?

மூன்றாமவன், —

மேகத்திலிருந்து ஒருவன் இறங்கி வந்தான்...
மேலான சேதி என்றான்....

முதலாமவன், —

தேவன் பிறந்திருக்கும் சேதியையும் அவன் சொன்னான்....

மூவரும், —

பார்க்கவும் துதிக்கவும் பாடவும் ஓடிவந்தோம்....

யோசப்பு, —

வாருங்கள் வந்து பார்த்துக் களித்திடுங்கள்.

(மரியாள் அமர்ந்திருக்க அவளருகில் யோசப்பு
பாலக யேசுவைப் பவ்வியமாய்க் கையிலேந்தி
மேய்ப்பருக்குக் காட்டுகிறார்.)

---

**பூவரசு**

5வது ஆண்டு நிறைவுப் போட்டிகளில்
கலந்துகொண்ட படைப்பாளர்களுக்கு
பூவரசு தன் வாழ்த்துக்களுடன் நன்றிகளையும்
தெரிவித்துக்கொள்கிறது.
பரிசுபெறும் ஆக்கங்கள்பற்றிய விபரங்கள்
ஆண்டு மலரில் வெளியாகும்.

## இலக்கிய முத்துக்களில்

— வீ.ஆர்.வரதராஜா

'சிறுதுரும்பும் பல்லுக் குத்த உதவும்!' என்பது பழமொழி.
ஆனால் இந்தத்துரும்பிற்கு இராமாயணம்கூறும் வியாக்கியானம் இருக்கின்றதே.. ஒருமுறை துரும்பை எடுத்து அதனைத் திரும்பத்திரும்பப் பார்க்கவேண்டும் போலத் தோன்றுகின்றது.
அது மாத்திரமல்ல. தமிழ்க்குலப்பெண்கள் தலைமயிருக்கிடையே வகிடு எடுக்கும் இடத்தில் செந்தூரத்தை (குங்குமம்) பூசிக்கொள்ளும் மர்மம் என்ன என்பதை இராமாயணம் நமக்குப் புரியவைக்கின்றது. செந்தூரத்தை வைத்துக் கொள்ளும் பெண்களுக்கு அதன் அர்த்தம்புரிந்திருக்குமா என்பதும் சந்தேகமே!

இராவணன் சீதையை சிறைவைத்திருந்த இடத்திற்கு வருகிறான்.
அப்போது சீதை இராவணனுக்கும் தனக்குமிடையே துரும்பாக நினைத்து புல் ஒன்றைப் போட்டு அதனைப் பார்த்தே பேசினாள்.
இதற்குப் பல காரணங்கள் உண்டு.
ஆய்வாளர்கள் பல்வேறு விதமாக விளக்கங்களைக் கூறியுள்ளனர்.
அதனைச் சற்று இங்கே அவதானிப்போம்.
புல்லைப் போட்டதினால் சீதை தன்னை அந்நியனாக நினைக்கிறாள். தன்மீது சீதைக்கு சிறிதுகூட வேறுவிதமான சிந்தனை இல்லை என்று அறிந்து தனது ஆசையை நீக்கிக்கொண்டுவிடமாட்டானா? என அவள் எதிர்பார்த்தாள்.
பெண்கள் அந்நிய ஆடவரிடம் பேசக்கூடாது. எனவே இருவருக்கும் நடுவே ஒரு புல்லையோ துரும்பையோ இட்டுத் தன்வார்ததைகளை அவன் கேட்குமாறு செய்தாள்.
நீ ஒரு துரும்பு. புல்லுக்குச் சமமானவன் எனச் சுட்டிக்காட்டினாள்.
உலக மாதாவான நான் நோக்கினால் புல்லுக்குக்கூட நல்லபுத்தி வந்துவிடும். அதைப்பார்த்தாவது புல்லறிவாளன் நல்ல புத்தி அடைவான் என்பது பொருள்.
உன்னை அறிவற்ற புல்லைப்போல் மதிக்கிறேன். துரும்பைப்போல மதிக்கிறேன் என்றாள்.
புல்லும் துரும்பும்கூட உபயோகமானவை. நீ எதற்குமே தகுதியற்றவன்என்றாள்.
பசு அறிவற்றது அதற்குப் புல்லைப் போடுவோம். நீ எதற்குமே தகுதியற்றவன்.
ஆண்சிங்கத்துடன் வாழ்ந்த பெண்சிங்கம் காட்டுக்குள் நரியுடன் வாழுமோ? அரியோடு வாழ்ந்த பேழை அங்கணத்து அழுக்குத் தின்னும் நரியுடன் வாழ்வதுண்டோ?
இராமபிரானே என்பிரபு. அவரை எண்ணும்போது நீ துரும்பு.
மூவுலகையும் என் காலடியில் நீ கொண்டு வந்து நிறுத்தினாலும் அவை எனக்குத் துரும்புக்குச் சமமே!
புண்ணிய மூர்த்தியான இராமபிரானைக் காணவே நான் உயிருடன் இருக்கிறேன்.

என் உயிர் எனக்குத்துரும்பு போன்றது.
துரும்பு போன்ற நீ பெரிய குற்றம் செய்கிறாய். இராமபிரானை சரணாகதி அடைந்துவிட்டால் உன்னை மன்னிப்பார்.
கடலின்நடுவே துரும்பைப்போட்டால் அது அலைகளால் தள்ளப்பட்டு கரைக்கு வந்துவிடும். இராமபிரான் கருணைக்கடல். துரும்பான நீ செய்த குற்றங்களை நெஞ்சில் வைக்கமாட்டார். ஒதுக்கிவிடுவார் என்றாள்.
சித்திரகூடத்தில் இந்திரன்மகனான ஜெயந்தன் காக்கைஉருவெடுத்து என்னைத் தீண்ட இராமபிரான் ஒருசிறுதுரும்பை பிரமாஸ்திரமாக ஏவி அந்தக்காக்கையின் கண்ணைக் குருடாக்கினார். அதுபோல் என்னைக்கண்ட உன்கண்களை இராமபிரான் அழிப்பார்.பிரமாஸ்திரத்தைத் துரும்பாகக்காட்டி நினைவுபடுத்தினாள். இறைவன் தூணிலுமிருப்பான் துரும்பிலுமிருப்பான் என்பது பெரியோர் வாக்கு. இராவணா! தூணிலிருந்து நரசிம்மமூர்த்தி தோன்றி இரணியனைக் கொன்றமாதிரி துரும்பிலிருந்துதோன்றி உன்னை அழித்துவிடுவார். எனத் துரும்பை இட்டு எச்சரித்தாள்.

## விபீஷணனின் தர்மம்.

"நம்முடைய புகழ்,செல்வம்,சுற்றம் முதலியவை நிலைத்திருக்கவேண்டுமானால் சீதையை விட்டுவிடவேண்டும். அவ்வாறுவிட்டுவிட்டால் அதைப்போல வெற்றி நமக்கு வேறேதும் இல்லை." எனப் பலவாறாக இராவணனிடம் எடுத்துரைக்கிறான் விபீஷணன்.
சீதையை மீண்டும் இராமனிடம் ஒப்படைக்குமாறு அவன் பல நியாயங்களைக் காட்டி வாதாடுகிறான்.உடன் பிறந்த சகோதரனை உரிமையுடன் திருத்த பெரு முயற்சி செய்கிறான்.
அதர்ம வழியில் அண்ணன் செல்லும்போது அவனைத் திருத்துவதே விபீஷணனின் தர்மமாகும். ஆனால் அது பலனளிக்கவில்லை.இராவணனுடைய கொடியவார்த்தைகளைக் கேட்டவுடன் மந்திரிகள் நால்வருடன் விபீஷணன் புறப்பட்டு விட்டான்.
அவன் சகலசெல்வங்களையும் துறந்து இராமனிடத்தில் அடைக்கலம் புகச் சென்று விட்டான்.
தர்மத்திற்காக எதனையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் தர்மத்தைத் துறக்கலாகாது. இந்த உண்மையை அறிந்தவர்கள் விபீஷணனின் தர்மச் செயலைப் போற்றுவார்கள். புரியாதவர்கள் தூற்றுவார்கள்.

## இராவணன் பெற்ற சாபங்கள்.

### வேதவதியின் சாபம்.

குஷத்துவக முனிவரின் மகள் வேதவதி! வேதம் ஓதுகையில் பிறந்ததினால் அவளுக்கு அப்பெயர் சூட்டப்பட்டது.
வேதவதி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து மணப் பருவம் அடைந்தாள். அவளின் பேரழகைக்கண்டு தேவர்களும் அசுரர்களும் அவளை மணக்க விரும்பினர். தன் மகளுக்குக் கணவனாக வரத்தக்கவர் திருமால் ஒருவரே என முனிவர் முடிவு செய்தார். அதனால் தன் மகளை

மணம்பேசி வருபவர்களுக்கு மணம்செய்து வைக்க மறுத்துவந்தார்.
வேதவதியும் தன்மணாளன் திருமாலே என எண்ணி வாழ்ந்துவந்தாள். ஒரு நாள் சம்பு என்றொரு அரக்கன் வேதவதியை மணந்துகொள்ள விரும்பி முனிவரிடம் வந்தான்.முனிவர் அவனுக்கும் மகளைக்கொடுக்க மறுத்து விட்டார். உடனே அந்த அசுரன் முனிவரைக்கொன்றுவிட்டான்.முனிவர் இறந்த சோகத்தால் அவர் பத்தினியும் உயிரிழந்தாள்.
தந்தையையும் தாயையும் இழந்த வேதவதி திருமாலையே நாயகனாக அடைய எண்ணி வனத்தில் தவம்புரிந்து வந்தாள். திக்விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவ்வழியே வந்த இராவணன் பேரழகி வேதவதி தவம் செய்வதைக்கண்டான்.
அவள் அழகைக்கண்டுமயங்கித் தன்னைமணந்துகொள்ளுமாறு வேண்டினான்.
அவளோ அதற்கு மறுப்புத் தெரிவித்தாள்.
கோபமடைந்த இராவணன் வேதவதியின் கைகளைப் பற்றினான். அதனால் சினங்கொண்ட வேதவதி அவனைப்பார்த்து,
"இராவணா! பிரம்மன் அளித்த விரதத்தின் மகிமையால் நீ செருக்குற்று என்னைப் பற்றினாய். நான் மறுபிறவியில் உனக்குக் கேடுவிளைவிப்பவளாகப் பிறப்பேன்! இது உறுதி!" என்று சாபமிட்டுவிட்டு நெருப்பில் மூழ்கினாள்.
சபதமிட்டவாறே அவள் மறுபிறவியில் ஜனகனுடைய மகளாகச் சீதை என்னும் பெயரோடு அவதாரம் செய்தாள்.
இறுதியாக இராவணனுடன் இராமன் போரிட்டு சீதையை மீட்டார்.
வேதவதியின் சபதம் நிறைவேறியது.

## நந்தி தேவனின் சாபம்.

முன்பொரு காலத்தில் இராவணன் குபேரனை வென்று புஷ்பக விமானத்தைக் கைப்பற்றி அதன்மேல் அமர்ந்து இலங்கைநோக்கிச் சென்று கொண்டிருந்தான். அவ்வாறு அவன் செல்லும் வழியில் சிவபெருமான் குடிகொண்டிருக்கும் கைலாயமலையின் மேலே அவ்விமானம் செல்லமுடியாமல் தடைபட்டு நின்றது. விமானம் தடைபட்டு நின்ற காரணத்தைப் பற்றி இராவணன் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது சிவகணநாதனான நந்திதேவன் அங்கு தோன்றினான். நந்திதேவன் இராவணனுக்குக் கைலாய மலையின் பெருமையை எடுத்துக் கூறி மலைமீது செல்லாது சற்று விலகிச்செல்லுமாறு அறிவுரை கூறினான்.
அவன்கூறிய அறிவுரையை இராவணன் ஏற்காததோடு அந்த நந்திதேவனை குரங்கு முகமுடையோய் என்று ஏளனமும் செய்தான்.
இதனால் கோபமடைந்த நந்தி தேவன் இராவணனை நோக்கி "இராவணா! நீ என்னைக் குரங்கு முகத்தவன் என்று இகழ்ந்து பேசியதால் குரங்குகளே உன் குலத்தோரை அழிக்கும்!" என்று சபித்துவிட்டான்.
அச்சாபத்தின் காரணமாகவே அனுமனும் சுக்ரீவனும் அவர்களது படைகளும் இராமனுடன் சேர்ந்து இராவணனுடன் போரிட்டு அவன் குலத்தோரை அழித்தனர்.

## இராவணனுக்கு அழிவு எப்போது?

இலங்கையை அடைந்த ஆஞ்சநேயர், அன்னை சீதாபிராட்டி எங்கே இருப்பார்? எங்கே அவரைத்தேடுவது?' என்றெல்லாம் எண்ணியவாறு காவல் புரியும்

அரக்கர்கள்கண்களில்படாமல் இரவுநேரத்தில் ஒரு சிறிய உரு கொண்டு உள்ளே நுழைய முடிவு செய்தான்.
அவ்வாறு உள்ளே நுழைய முயற்சிக்கும்போது திடீரென அவன் முன்னால் பூதாகாரமாக ஓர் அரக்கி தோன்றி இடிபோன்று முழங்கினாள்.
"யாரடா முட்டாள்! என் அனுமதியில்லாமல் இந்நகரத்துள் நுழையவா செய்கிறாய்? நான்யார் தெரியுமா? என்பெயர் இலங்கனி! இலங்கையைக் காவல் புரிபவள் நான்தான்.! யார் நீ ? எங்கே வந்திருக்கிறாய்?"
ஆஞ்சநேயரோ தாம் சும்மா சுற்றிப்பார்க்க வந்திருப்பதாகக் கூறினார்.
இலங்கினியின் கோபம் மேலும் அதிகமாகிற்று.
"திருடனைப்போல் இங்கே வருகிறவர்கள் எனக்கு ஆகாரமாகிவிடுவார்கள்!" என்று கத்திக்கொண்டே அனுமனை ஓங்கி அடித்தாள்.
அடிபட்ட அதிர்ச்சியிலிருந்து சில வினாடிகளில் தம்மை விடுவித்துக்கொண்டு ஆஞ்சநேயர் தம் முஷ்டியால் அவள் கன்னத்தில் பதிலடி கொடுத்தார். வாயு குமாரனின் அந்த அடியை இலங்கினியால் தாங்க முடியவில்லை.அவள் தட்டுத் தடுமாறிக்கொண்டே கீழே விழுந்தாள்.
பின்னர் சிறிது நேரத்தில் இலங்கிணி சுய உணர்வு பெற்றுத் தன் சுய நிலைக்கு வந்தாள்.ஆஞ்சநேயரை வணங்கி அவள் கூறியதாவது.—
"இராவணனின் ஆட்சி ஒழிந்து எப்போது அரக்கர் இனத்தின் அழிவு ஏற்படும் என்பதற்கு பிரம்மதேவன்என்னிடம்ஒரு தடயம்கூறினார்.அதாவது இராவணனின் இலங்கையைக் காவல்காக்கும் நோக்கத்தோடு சிருஷ்டிக்கப்பட்ட நான் என்று ஒரு குரங்கால் அடித்து வீழ்த்தப்பட்டுத் தோல்வி அடைகிறேனோ அன்றைய தினமே இராவணனின் அழிவுக்காலம் நெருங்கிவிட்டதாக உணர்ந்து கொள்ளும்படி பிரம்மதேவர் என்னிடம் கூறியிருக்கிறார். இன்று உன்னால் நான் தோற்கடிக்கப்பட்டேன். இராமனால் இராவணன் அழியப்போவது நிச்சயம். நீ வந்தகாரியத்தில் வெற்றிபெறுவாய் என்பதில் சந்தேகமேயில்லை.
என் பிரிய ஆஞ்சனேயனே! இராமபிரானின் தூதுவனாகிய உன்னைத் தரிசித்ததின் பயனாக நான் பெரும்பேறு பெற்றவளாகின்றேன்!" என்று கூறினாள்.

## செந்தூரப்பொட்டு எதற்கு?

இராமனிடமிருந்து தூதுசென்ற அனுமார் நேரே இலங்கைக்குச்சென்று பலத்த தேடுதலின்பின் அசோகவனத்தில் சீதையைக் கண்டார்.
அவர் உள்ளம் ஆனந்தக் களிப்பில் மூழ்கியது.
காணவந்த அன்னையைக் கண்டுவிட்டோம் என்ற மகிழ்ச்சித்திளைப்பில் நெஞ்சம் மிதந்தது.
இராமர் சொல்லியனுப்பிய செய்திகள் அனைத்தையும் அன்னையிடம் கூறினார். கணவனின் செய்தி கேட்டு உயிர் பெற்றெழுவதைப்போல் உற்சாகமடைந்தாள் ஜானகி.
அனுமார் விடைபெறும் நேரம் அன்னையைச்சுற்றி வலம்வந்து வணங்கிநின்று கவனித்தார். அப்போது அன்னையின் முகத்தில் வகிடு எடுக்கும் இடத்தில் செந்தூரம் வைக்கப்பட்டிருந்தது. இது எதற்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று யோசித்தார் அனுமார்.
அவருக்குப் புரியவில்லை.
உடனே அன்னையிடம் "அன்னையே! தாங்கள் நெற்றிக்கு மேலே வகிடு எடுக்கும்இடத்தில் செந்தூரம் இட்டிருக்கிறீர்களே இது எதற்காக?" என்று

கேட்டார். உடனே அன்னை.—
"என் கண்கண்ட தெய்வமான என்கணவரின் ஆயுள் விருத்தியடையவேண்டும் என்பதற்காக அதை வைத்திருந்தேன்!" எனக் கூறினார்.
அவசர அவசரமாக அங்கிருந்து சென்ற அனுமார் செந்தூரத்தைத் தேடி எடுத்துவந்து தன் உடல்பூராவும் பூசிக்கொண்டு "அன்னையே! இதைப் பாருங்கள்! நீங்கள் சிறிதளவே வைத்துக்கொண்டீர்கள். நான் உடல்பூராவும் செந்தூரத்தைப் பூசிக்கொண்டேன். இது எம் பிரானின் ஆயுளை எத்தனை மடங்கு விருத்தி செய்யும்?" என்று கேட்டார்.
சீதைக்கோ ஒரே சிரிப்பு. அதே நேரத்தில் தம்மைவிட அதிகமாக தம்கணவரை நேசிக்கும், பூசிக்கும் அனுமாரைக்கண்டு வியந்துபோய் நின்றுவிட்டாள்.
"அனும! எந்தப்பெண் தன் வகிட்டில் செந்தூரப்பொட்டை வைத்துக் கொள்கின்றாளோ அவளுடைய கணவனது ஆயுளானது வளரும். அதற்காக நீ இப்படி உடல்பூராவும் பூசிக்கொள்ளலாமா? என்றாலும் உனது அன்புக்காக அளவு கடந்த பக்திக்காக இச்செயலும் முக்கியத்துவம் பெறட்டும்!" என்றாள்.

(அதனால்தான் இன்றும் அனுமார் கோயில்களில் அவர் உடல்பூராவும் செந்தூரம் பூசப்படுகின்றது!)

(முத்துக்குளியல் தொடரும்)

---

# உள் நோக்கிய பார்வை

*தன் கொம்பின் வாசனையைத்*
*தானறியாக் கவரிமான்*
*பல் நெடுந்தூரம் பயணம் செய்யும்.*
*எங்கிருந்து வந்ததிந்த*
*வாசனையென்று தேடி.*
*மானினம்மட்டும் என்றில்லை*
*மனிதர்நாமும் அப்படியே*
*உள் முகத்தைப் பாராது*
*ஊரெல்லாம் யாத்திரை*
*உள்வீட்டு முற்றத்தில்*
*தொலைந்த சிறு பொருளை*
*ஊர்சந்தி வெளிச்சத்தில்*
*தேடினாள் ஓர் கிழவி*

*இருக்கும் இடத்தைவிட்டு*
*இல்லாத இடத்தில்*
*ஏன் தேடுகின்றாய்? என்றதற்கு*
*உள் வீட்டில் ஒளியில்லை*
*என்றுரைத்த கிழவிபோலே நாமும்*
*எம்முயிரில் கலந்திருக்கும்*
*இறைபொருளை உணராமல்*
*எங்கெங்கோ அலைகின்றோம்*
*கட்புலனுக்கு அடங்காத*
*கடவுள் தனைத் தேடி!*


— ப. இராஜகாந்தன்

- வேலணையூர் பொன்னண்ணா.



அகதி...! அகதி....!
நான்... அகதி.......!
அகிலம்......எல்லாம்...என்
தமிழ்,இனம்அகதி.....!

எமக்கொரு தாய்மண்....
வேண்டும் என்று........
எண்ணிட.... மறந்து......
இடம் பிரிந்து........
தமக்கொரு... தலைமை...
தான்கொண்டு.....
தேசியம் பேசிய...எம்
முன்னவர் செயலால்......!



அகதி....! அகதி.....!
நான்......! அகதி.....!
அகிலம். எல்லாம்...என்
தமிழ், இனம்அகதி....!

ஒன்றுபட்டு...கரம்சேர்த்து...
ஒற்றுமையாக.....ஓரணிசென்று...!
தமிழன் உரிமை எடுத்திடவே....!
தமிழ்த் தலைமைகள்...எல்லாம்....!
தான் மறுத்து.........
திசைகளை ... மாற்றி...
திரும்பிய... திசையில்....
கண்களை விற்று....!
சித்திரம் வாங்கிய......!
குருடர் பதவி பெற்றதனால்....!



அகதி....! அகதி........!
நான்... அகதி........!
அகிலம்... எல்லாம்..என்
தமிழ்,இனம்அகதி...என்
தமிழ், இனம்அகதி.......!

வேலணையூர் பொன்னண்ணா

யாழ்பாடிப் பெற்றெடுத்த யாழ்நகரம்
பாழ்பட்டுப் போவதை நாம் பார்ப்பதெப்படி?
இரத்தவுறவுகள் இன்னலுறுவது இரவென்ன பகலென்ன
கண்முன்னே தோன்றி கதி கலங்க வைக்கிறதே!
புராதன தலைநகரம் பொன்னையள்ளிக் கொடுக்கும்
தராதரத் தமிழர் உலாவரும் பூமி!
நிலாவின் முற்றத்தில் நிம்மதியாய்க் கூடிவாழ்ந்து
விழாக்கள் பலவெடுத்து விருந்தோம்பல் தாம்செய்து
வந்தோரை வாழவைத்த வண்தமிழர்
வாழ்விழந்து வசதியிழந்து வீடிழந்து விழிநீர் வடிய
உறவுகளைப் பாதியில் தொலைத்து
உதிரத்தில் குளித்த உறவுகளைப் பார்த்து
ஓடுகின்றார் வாழ்க்கையின் ஓரத்திற்கே!
கன்றினையிழந்த பசுவினைப்போல்
பெற்ற பிள்ளையைப் பறிகொடுத்த தாய்!
பெற்றோரைப் பிணமாகப் பார்க்கும் சேய்!
கற்றோரே கலங்கியழும் காட்சி!
கயவர்களுக்கில்லையே மனச்சாட்சி!

ஏனென்று கேட்க எந்த நாடும் வரவில்லை!
எழுந்துவந்து உதவிசெய்ய எவருக்குமே மனமில்லை!
சகோதர நாடோ பக்கத்தில் சலனமின்றி தூக்கத்தில்!
பூனைகண்ணை மூடியதுபோல்!
மேடைப்பேச்சுக் கனவான்களோ மௌனமாகி
மேன்மை தங்கிய நாயகிக்கு
சேலை துவைத்துப் போடுகின்றார்!
சிங்கத்திற்குச் சாமரம் வீசுகின்றார்.!

தமிழர்கள் தாம்செய்த குற்றமென்ன?
தமிழராய்ப்பிறந்ததே யவர்கள்செய்த பாவமா?
தன்மானமாய் வாழ நினைத்தது தமிழர்தம் தவறா?
உரிமைகளைக் கேட்டால் ஓடஓட விரட்டுவதா?
ஊமையாய்க்கிடப்பது மடமையல்லவா?



கடல்போல் பொங்கிவரும் எதிரிப்படைகள்!
கனல்கக்கிப் பாய்ந்துவரும் நவீன கருவிகள்!
மழைபோல் பொழியும் எறிகணைகள்!
இடி மின்னலாய் எகிறிவரும் செல்லடிகள்!

தேன்கூட்டில் கல்லெறிந்த தீயோரே
கொட்டுவது தேனில்லை! குருதி!
தேனீக்கள் பறப்பதைப்பார்த்து நகைக்காதீர்!
தேனீக்கள் திரும்பிவந்து கொட்டினால் தாங்கமாட்டீர்!
குருவிக் கூட்டைக் குலைத்த கொடியோரே!
பசியால் துடிக்கும் மழலைகளையும் பார்த்தீர்களா?
பஞ்சத்தால் வாடிடும் மக்களை எண்ணினீர்களா?
பாண்துண்டுக்கே தவிக்கும் ஜீவன்களை அறிவீர்களா?
நீண்ட நெடும்பரப்பில் வாழ்ந்த இனம்
நிற்பதற்கே இடமின்றி நெருங்கி நசியுண்டு
கண்கள் பிதுங்கி காற்றோடு கலப்பதா?
கல் நெஞ்சங்களே கரையும் காட்சி!

வீர மறவர்கள் என்றுமே தோற்பதில்லை!
விடுதலைத்தீயினை குடத்துநீரால் அணைக்கமுடியாது!
வீழ்ந்தாலும் வித்துக்கள் முளைத்து வரும்!
விடுதலை விருட்சங்களாய்ப் படர்ந்து வரும்!

— இ.சம்பந்தன்.

# சந்திப்போம்

சென்ற இதழில் வெளியான
சோழியான் அவர்களது விமர்சனத்துக்கு
கட்டுரையாளர் எஸ்.ஆர்.நிஸ்தார்
பதிலளிக்கிறார்.

# சிந்திப்போம்

திரு சோழியான் அவர்கள், 'நாளைக்கு நாங்கள்' என்ற எனது கட்டுரை தொடர்பான பல விடயங்களையிட்டு தன் அதிருப்தியைத் தெரிவித்து ஒரு விமர்சனத்தை எழுதியுள்ளார். இது தொடர்பாக என் நிலை என்ன என்பதை வாசகர் அறிய வேண்டும் என்பதற்காய் என்னை அணுகிய பூவரசு நான்விரும்பும் பட்சத்தில்மாத்திரம் இதை வெளியிட என்னிடம் அனுமதி கேட்டுள்ளது.

அதற்கிணங்க —
சோழியான் விமர்சனத்தின் பந்தி ஒன்றின் முதல் பந்தியை என் கட்டுரையிலே 'தாயகத்தில் ஏற்பட்டுள்ள ஒரு தவிர்க்கமுடியாத சூழ்நிலை' என்ற வசனத்தின் மூலம் விளக்கியுள்ளேன். முதல் பந்தியின் இரண்டாம்பகுதியை எனது நாளைக்கு நாங்கள் என்ற கட்டுரையின் மூன்றாம் பந்தியில் அப்படியே சொல்லியுள்ளேன். ஆகவே இப்பந்திக்கு சோழியானின் விமர்சனமோ அல்லது அதற்கான என் எதிர்விளக்கமோ தேவையில்லை.

திரு சோழியான் தன் விமர்சனத்தின் 2ம் பந்தியில், அவரின் 1ம் பந்தியின் இரண்டாம்பகுதி தொடர்பாக நான் ஆராயாமல் விட்டுவிட்டதாகச் சொல்கிறார். எனக்கு பூவரசால் தரப்பட்ட தலைப்பு நாளைக்குநாங்கள் என்பதே., என்பதுடன் இத் தலைப்பு இன்னின்ன அடிப்படையில் ஆராயப்படவேண்டும் எனக் கேட்கப்படவில்லை.

ஆசிரியர் குழு அளித்த தலைப்பை தனிப்பட்ட மனிதரான திரு சோழியானுக்கு இன்ன அடிப்படையில்தான் அத்தலைப்பு ஆராயப்படவேண்டும் என என்னைப் பணிக்க அதிகாரமுமில்லை. புரிகிறதா சோழியான் அவர்களே?

மேலும் அகதிகளாகிய நம் புகலிடத்து ஆரம்ப வாழ்க்கையை நான் கேலி செய்துள்ளதாக கூறுகிறார். எங்கே கேலிக்கான வார்த்தைகள்?... "வாழ்வைத் தொடங்கும் நாம்,...." என்று என்னையும் அதற்குள்ளே சேர்த்துள்ளேனே... என்னையே திட்டமிட்டு நான் கேலிசெய்கின்றேனா? புரியவில்லையா சோழியான்?

தொடர்ந்தும் 2ம் பந்தியில் பணத்தின் முக்கியத்துவத்தை கூறி அப் பணத்தை மையமாகவைத்து ஒருவரை 'நல்லாய் இருக்கிறார்' என்றால் தவறென்ன என்ற கேள்வியையும் கேட்கின்றார். ஸார் அது தவறுதான் ஸார். 'நல்லாய்' என்ற வார்த்தைக்கு பணத்துக்கு அப்பால் இன்னும் அப்பால் பல கருத்துக்கள் உள்ளன. இது கனமான வார்த்தை ஸார். பணம் நிறைய உடையோரை பணக்காரர் என்று சொல்லுங்கள். அல்லது கோடீஸ்வரர், வசதி

படைத்தவர், சொத்து சம்பத்து நிறையஉடையோர் எனச்சொல்லுங்கள். ஆனால் நல்லாய் என்ற வார்த்தையைக் கொச்சைப்படுத்தாதீர்கள். எனினும் பணக்காரனை நல்லாய் இருக்கின்றான்என்றுதான் அழைப்பேன் என அடம்பிடித்தால் அப்படியே அழையுங்கள். நான் உங்கள் தமிழ்வாத்தியாரா என்ன? உங்கள் தமிழ் புலமையைவிட்டு புள்ளிபோட.

திரு சோழியானின் 3ம்பந்தி என்கட்டுரைக்கு சம்பந்தமில்லாதவிடயங்களையே கூறுகின்றது. மேலும் இதே பந்தியில் தரப்படுத்தல் கல்விநிலையம் (Tutory) என்ற இரண்டு விடயங்களுக்கும் முடிச்சுப்போட்டுள்ளார். எனக்கு இதிலொன்றும் புரியவில்லை.
வாசகர்களே! உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?
நான் பிரத்தியேக கல்வி நிலையங்களை கல்விக்கடை என்று என் கட்டுரையில் குறிப்பிட்டது சொந்த அனுபவத்தின் ஊடாக. இதற்கு நல்ல உதாரணம் நம் தாய்த் திருநாட்டில் எங்கும் காணலாம்.
சினிமா பட விளம்பரங்கள்போல, பெரிய அளவில் ஆசிரியர்களின்பெயரும், என்ன பாடத்துக்கு என்ன விலை என்று ஒருகடை அறிவிக்க, போட்டி கல்விக்கடை நான்கு பாடங்கள் தங்களிடம் கற்கவிரும்பினால் கட்டணக் கழிவுகளை அறிவிக்கும். அடுத்த போட்டிக்கடை இலவசமாக கருத்தரங்குகளை (Seminar) நடத்தும். இதன் மிச்ச சொச்சங்கள் இங்கும் நடனப் பள்ளிகளில் காணக் கிடக்கின்றன.
பந்தி 4ல் போதைப் பொருள்கள் கடத்தல், எல்லைகளினூடாக ஆட்கடத்தல், களவாடப்பட்ட பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அதை சேவை மனப்பான்மையுடன் மலிவுவிலைக்குவிற்று நம்சமூகத்துக்கு நன்மைசெய்வதாக எண்ணும் சின்னத்தனங்களை எல்லாம் வியாபாரத்துக்குள் அடக்க வேண்டாம் என்பதுதான் என் நிலைப்பாடு.
இதைக் கூறி முழு தமிழ் சமூகத்தையும் நான் இகழ்வதாக திரு சோழியான் கூறுகிறார். ஐயா! ஏன் ஜெர்மனியை எல்லோரும் சந்தேகக்கண்ணுடன் நாசிநாடு எனப் பார்க்கிறார்கள்? இதன் அர்த்தம் ஜெர்மனியின் முழு சனத்தொகையும் நாசிகள் என்பதா? கூட்டிக்கழித்தால் மொத்தசனத்தொகையில் 1%மும் நாசிகள் இல்லைபிறகு எதற்காக?ஒரேஒரு மனிதன் ஹிட்லருக்காகஅவன் கொள்கையில் ஈர்க்கப்பட்ட பலநூறு நாசிகளுக்காக.
எனவே இப்பந்திக்கு மேலதிக விளக்கம் தேவையில்லை.

பந்தி 5ல் போட்டி வியாபாரங்கள் குறித்தும் திரு சோழியான் கவலைப் படுகின்றார். புகலிடங்களில் ஆரம்பிக்கப்படும் அனேகவியாபாரங்கள் சமூகசேவை நோக்கம்கொண்டதா? அல்லது சமூகசேவை — இலாபநோக்கமா? இதுகூட பரவாயில்லை. ஆனால் தனியே கொள்ளைலாபமும் அடுத்தவனின் வியாபார வளர்ச்சியில் ஏற்பட்ட பொறாமையும்தான் காரணமாக உள்ளதை நாம் காண்கிறோம். இதைத்தான் நான் கண்டித்தேன். இலங்கையில் இருந்து 70 ரூபாவுக்கு இறக்குமதி செய்த பொருளொன்றை 70 டொச்சமார்க்கிற்கு விற்பது அதை வாங்கியோருக்கும் வாசிப்போருக்கும் ஏன் என்று புரியாதா? திரு சோழியான் உங்களுக்குப் புரியாவிட்டால் அது உங்கள் பிரச்சினை.

இனி இவரின் அடுத்த பந்தியில்.... பெண்கள் பக்கமும் நான் காறித்துப்பி இருக்கிறேன் எனக்குற்றம்சாட்டுகிறார்.பெண்வாசகர்களே! உங்கள்இதயங்களைத் தொட்டுச் சொல்லுங்கள். இந்த கழுவல் (putzen) வேலைக்கு இலங்கையில் உங்கள் பெற்றோர் அல்லது சகோதரர் அல்லது உங்கள் கணவன்மார்

அனுமதிப்பார்களா? அதைவிடுங்கள் ஸார். பெண்களிடம் இரகசியமாகவேனும் கேட்டுப்பாருங்கள் அவர்கள் இத்தொழிலுக்குத்தயாரா என்று. இதுவும் இது போன்ற இன்னோரன்ன விடயங்களும்தான் பெண் உரிமைக்குள் வருகிறது.
அந்தப்பக்கத்துப் பெண்கள்என்று யாரைச்சொல்கிறீர்கள்.எனக்கு விளங்கவில்லை. இருந்து இங்கும் இவர்கள்தான் அதிகம் என்று சொல்வதிலிருந்து அட நம்மாளுங்களைத்தான் நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்போலும்.
அது சரி.அவர்களிடமே கேட்டுப்பார்ப்போம். 'ஏமா கண்ணுகளா திரு சோழியான் சொல்வதுபோல இங்க சாதனைகள் ஏதாவது படைத்தீர்களா?ஒரு சாதனையை சொல்லுங்கள். சாதனைகள் பற்றிப் பிறகு பார்ப்போம். டொச்மொழிபடித்து சாரதி அனுமதிப்பத்திரம் (Driving licence)பெற்றதை சாதனையாக நினைக்க வேண்டாம்.
தன்னையழித்து பிறர்மெச்ச சாதனை செய்பவர்களாகக் கௌரவிக்கப்படும் போர்க் குணப் பெண்களைக்கூட நடைமுறை சமுதாய வாழ்க்கையில் மிகப் பலவீனர்களாக்கிவிடும் ஐயா நம் சமூக அமைப்பு.

அடுத்த பந்தி மிகவும் சுவாரஸ்யமானது. அவர் கேட்கிறார். "பாணை இறக்குமதி செய்வது நாங்களா அல்லது ஸ்ரீலங்கா அரசா?" என்று நாங்கள் என்று நீங்கள் குறிப்பிடுவது யாரை ஐயா? இலங்கைக் கடவுச்சீட்டுடன் இலங்கையர் (Sri Lankisch) என்று பெயர் குத்தப் பட்டுள்ளவர் நீங்கள். அப்படியிருக்க ஏதோ வேற்றுநாட்டுப்பிரஜைபோலவும்,அங்கே ஆட்சியதிகாரத்தில் இருந்துகொண்டு கேட்கப்படும் கேள்விபோல் தோன்றுகிறதே. வாசகர்களே நீங்களும் அப்படி எதையாவது உணர்கின்றீர்களா? திரு சோழியானே உணர்ச்சி வசப்படவேண்டாம். நான்தந்த பாண்விவகாரம் ஒரு உதாரணம்தான். அதாவது புகலிடங்களில் படிக்கும்பிள்ளைகள் தன்விருப்பப்படி திறமைப்படி பேக்கரியாளன் (Baker) ஆக படிக்க, பயிற்சிபெற விரும்பினாலும் பெற்றோர், நாம்வாழும் சமூகம் இதைவிட கௌரவமான தொழில் கிடைக்கவில்லையா என்றுதான் கேட்குமே தவிர இதைக் கௌரவிக்காது. பாண்சுடல், மீன்பிடித்தல், கள்ளு இறக்குதல் எல்லாம் பாமரர்தொழில்என்று முத்திரைகுத்தியுள்ளோம். இதைத்தான் சொன்னேன். அடுத்து நிரந்தர அமைதி ஏற்பட்டால் எல்லாமே சாத்தியமாகும் என்று குறிப்பிடுகின்றார் எல்லாமே என்ற இவரின்கருத்துடன் எனக்கு இசைவு இல்லை. விளையும் பயிரை முளையில் தெரியும் பாருங்கள்.

மேலுள்ள பந்தியில் அவர் வேறு ஸ்ரீலங்கா அரசு வேறு என்ற தோரணையில் பேசியவர் அடுத்த பந்தியில் இங்கு கொழும்புக்கு வாருங்கள் Disco, Aids விடயங்கள் விபரங்கள் எல்லாம் காட்டுகிறேன் என்கிறார். நீங்கள் வேறு நாட்டு பிரஜை என்றால் இந்த கொழும்பைவிட்டு விடுங்கள். இது பெர்லின், பரீஸ் போன்று வேற்ற நாட்டுவிவகாரங்கள். இல்லை நான் இன்னும் இலங்கையன்தான் என்றால் ஏன் ஸார் கொழும்பு கோலங்கள் யாழ்ப்பாணத்திலும் புத்தளத்திலும் மட்டக்களப்பிலும் என்று நாலாபக்கங்களிலும் பரவுவதில் என்ன தப்பு என்று கேட்கிறீர்களா? சரியான ஆள் ஐயா நீங்கள்.

அதே பந்தியிலேயே...'எங்கடை ஆக்களும் இருக்கினம்...?' என்கிறார்... கனடா பிரான்ஸ் போன்ற பெரிய நாடுகளிலும் 'எங்கடை ஆக்களின்' இத்தகைய விடயங்கள் தொடர்பாக அங்குள்ள தமிழ்ப்பத்திரிகைகள் விளாசித்தள்ளுகின்றன. சோழியான் அவர்களே இத்தகைய 'எங்கடைஆக்கள்' இளைய தலைமுறையில் இன்னும் உருவாகாமல் அவர்கள் உத்தேச தமிழ் ஈழத்துக்குள் ஊடுருவாமல் தடுப்பது எப்படி என்பதுதான் என் Disco கலாச்சாரம் தொடர்பான கவலை. ஒரு சமூகத்தின் கலாச்சார பண்பாட்டுச் சீரழிவுக்கு Disco ஒரு வலுவான

அடிப்படை என்பது என் அசைக்கமுடியாதவாதம். மேல்நாட்டினர் குழந்தைகள் டிஸ்கோ (Kinder Disco), குடும்ப டிஸ்கோ (familien Disco), இளையவர் டிஸ்கோ (Teenage Disco) என்று காட்டும் பூச்சாண்டிக்குள் எம் ஆட்களை அகப்பட வைத்துவிடாமல் நாம் எல்லோரும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஒத்துழையுங்கள் திரு சோழியான் அவர்களே.

கடைசிப்பந்தியில் ஏதோ என் கட்டுரையின் ஒரே ஒரு விடயத்தில் மாத்திரம் நேர்மை தெரிவதாக எழுதியுள்ளார். இப்படியாவது என்னை உற்சாகப்படுத்தும் திரு சோழியானுக்கு என் நன்றிகள்.

ஆக என் நாளைக்கு நாங்கள் என்ற கட்டுரையில் சொல்லப்பட்ட விடயங்கள் அனைத்தையும் அனைவர் தொடர்பாகவும் சொல்லப்பட்ட விடயங்களாகத் திரு சோழியான் கற்பனைபண்ணியதின் விளைவுதான் அவரது விமர்சனம் எனத் தோன்றுகிறது. நல்லவைகள்பற்றி என் கட்டுரை நிறையப்பேசாவிட்டாலும்கூட அவை கெட்டவைகளாக மாறப்போவதில்லை.

ஆனால் கெட்டவைபற்றி அறிந்து அதைப்பற்றி நாலுபேர் பேசி அவைகளை நல்லதாக்கவேண்டியதன் அவசியத்தையே நான் நோக்கமாகக் கொண்டிருந்தேன். பெருமைகளைமட்டும் பேசி ஆணவத்தில் அழிந்து போகாமல் சிறுமைகளை சீராக்கி இன்னும் பெருமை பெறுவோம்.

நன்றி.

·O·

அடுத்து —
சந்திப்போம் சிந்திப்போம் பகுதியில்
திரு. சி. கமலநாதன் அவர்களின்
சைவசமயமும் சர்வமத சமரசமும் தொடர்பாக
திரு சஞ்சயன் அவர்களின் விமர்சனமும்
கட்டுரையாளர் பதிலும். இடம்பெறுகிறது.

**படைப்பாளர்களின் கவனத்திற்கு!**

*பூவரசு இனிய தமிழ் ஏடு-*
*உங்கள் கருத்துச் சுதந்திரத்திற்கு இடமளிக்கிறது!*
*எழுதப்படும் ஆக்கங்களின் கருத்துக்கள்*
*ஆக்கதாரரின் சுய உரிமை.*
*பூவரசு அவற்றிற்குப் பொறுப்பாகாது!*
*மனிதநேயத்தோடு.*
*சமுதாய நலன்கருதி படைக்கப்படும்*
*படைப்புக்களைப் பூவரசு*
*இதயபூர்வமாக வரவேற்கிறது!*

— ஆசிரியர்

# செய்தி மடல்.

கார்த்திகை 95

***தொகுத்துத் தருபவர் வீ.ஆர்.வீ.***

தமிழர்களின் விடுதலை வரலாற்றில் கார்த்திகைமாதம் முக்கியத்துவம் பெற்றுவிட்டது. யாழ் குடா நாட்டில் மனிதவள அழிப்பை நோக்கமாகக்கொண்டு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

☐ ஐந்துலட்சம் தமிழர்களை பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தியதன் மூலம் இராணுவத்தின்நோக்கம் முறியடிக்கப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

☐ கண்மூடித்தனமான ஆட்டிலறி, செல்தாக்குதல்களினால் பல பொதுமக்கள் மரணத்தைத்தழுவியுள்ளனர்.

☐ வசதியாக வாழ்ந்த தமிழர்கள் அகதிகளாக சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி,வவுனியா ஆகியபகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.தமிழ்மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்காக சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். இதேவேளையில் அரசு தமிழ் அகதிகள் உள்ள பகுதிகளுக்கு உணவுப்பொருட்கள் செல்வதை சகலவழிகளிலும் தடுத்து வருகின்றது.

☐ உரும்பிராய்,கொக்குவில்,கோண்டாவில், கந்தர்மடம்,நல்லூர், கல்வியங்காடு, யாழ்ப்பாணம்,அரியாலை, ஆகிய பகுதிகளிலிருந்தும் மற்றும் சில பகுதிகளிலிருந்தும் மக்கள் முற்றாக வெளியேறியுள்ளனர்.

☐ மனிதவளச் சீரழிவு **(Human Disaster)** என தமிழ் அகதிகளின் துன்பத்தை யாழ்ப்பாணத்திலுள்ள செஞ்சிலுவைச் சங்க அதிகாரியொருவர் வர்ணித்தார்.

☐ நாற்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட துருப்புக்களுடன் யாழ்நகரை நோக்கி சிறிலங்கா இராணுவம் முன்னேறி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலுக்கு மத்தியில் பலத்த இழப்புக்களுடன் நவீன கனரக ஆயுதங்களுடன் சிறிலங்கா இராணுவம் முன்னேறி வருகின்றது.

☐ இதேவேளையில் இரண்டு சிறிலங்காவிமானங்கள் வடபகுதி வான்பரப்பில் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவற்றில் மொத்தம் இரண்டு விமானிகளுடன் 68 இராணுவத்தினர் பலியாகினர் எனத் தெரிவிக்கப் படுகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் இவற்றினைச் சுட்டுவீழ்த்தினர் என இராணுவத்தினர் தெரிவித்தனர்.

☐ கொழும்பிலும் தென்பகுதிசிறிலங்காவிலும்வசிக்கும் தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால் பெருந் துன்பத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். தமிழர்கள் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டு கொலைசெய்யப்படுகின்றனர்.இது இனக் கலவரத்தைவிட மோசமான நடவடிக்கையென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

☐ தமிழீழத்தில் யாழ்குடாநாட்டில் சிறிலங்காஇராணுவம் தாம் ஆக்கிரமிக்கும் பிரதேசங்களில் உள்ள அனைத்துவீடுகளையும் ஏனைய கட்டடங்களையும் புல்டோசர் கொண்டு தரைமட்டமாக்குகின்றனர் என அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.அத்துடன் பயிர்களும் பயன்தரும் மரங்களும் அழிக்கப்பட்டுவருகின்றன.

☐ யாழ்ப்பாணம் நவம்பர் மாதம் 26ம் திகதிக்குமுன் பிடிக்கப்படும் என்றும் எனவே அத்தினத்தை சிங்களமக்கள் மகிழ்ச்சியாகக்கொண்டாட வேண்டும் என்றும் ஆனாலும் தமிழ்மக்களின் மனம் நோகாவண்ணம் அவை அமைய வேண்டும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா தொலைக்காட்சியில் உரையாற்றினார். ஏனெனில் நவம்பர் 26ம் திகதி தமிழீழத் தேசியத்தலைவர் திரு பிரபாகரன்அவர்களின் பிறந்தநாள் என்பதால் அத்தினம் யாழ்ப்பாணத்தை இராணுவம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவேண்டும் என அவர் எதிர்பார்த்தார்.ஆனால் இதுவரை யாழ்ப்பாணம் சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை.அதனால் கொண்டாட்டமும் ஒத்திப் போடப் பட்டுக்கொண்டிருக்கின்றது.

☐ இதேவேளையில் தமிழீழமெங்கும் மாவீரர் நாள் இம்முறை நவம்பர் 27ம் திகதி எழுச்சிவிழாவாக நடைபெற்றுள்ளது.மாவீரருக்கு தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தி மாவீரர் நாள் அங்கு உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

☐தமிழ்நாட்டில் தமிழீழத்தமிழரை ஆதரித்து தொடர்ச்சியானஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. இந்தியா தமிழீழவிடுதலையை ஆதரிக்கக்கோரி நவம்பர் 30ம் திகதி முழுத்தமிழ்நாடும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டது.தமிழ்நாடு ஆளும் கட்சியும் அந்த வேலை நிறுத்தத்திற்குப் பூரண ஆதரவு வழங்கி அத்தினத்தை விடுமுறைநாளாகவும் அரசு பிரகடனப்படுத்தியது.

☐தமிழ்நாட்டின் ஆறுகோடி மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இந்திய அரசு மௌனம்சாதிக்கின்றதென தமிழ்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர். இலங்கைக்கு உதவி செய்யாதே,தமிழர்களைக் கொலைசெய்வதற்குத் துணைபோகாதே என அவர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

☐ தமிழீழவிடுதலையை ஆதரிக்கக்கோரி ஐரோப்பிய நாடுகளிலும் கனடா அவுஸ்திரேலியா அமெரிக்காபோன்றநாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணிநடாத்தினர். ஜேர்மனியில் ஒரேநாளில் ஏழு நரங்களில் இம்மாபெரும் பேரணிகள் நடைபெற்றன.ஜேர்மனியின் வடபகுதிக்கான பேரணி பிறேமன் நகரில் நடைபெற்றது.

□ தமிழீழ மாவீரர்நாள் கார்த்திகை 27. அத்தினத்தை புலம்பெயர்ந்து உலகடங்கிலும் வாழும்தமிழ்மக்கள் உணர்வு பூர்வமான எழுச்சி விழாவாகக் கொண்டாடினர்.

□ ஜேர்மனியில் 25ம்திகதி Krefeld நகரில் மாவீரர்நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் சுமார் ஏழாயிரத்துக்கும் அதிகமான தமிழ்மக்கள் கலந்து கொண்டனர்.

□ சமாதானப் பேச்சுவார்த்தைகள்குறித்து சிறிலங்கா ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரணதுங்கா மீண்டும் கதைத்துள்ளார்.ஆனால் சிறிலங்கா இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்துள்ளவரை பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லையென தமிழீழத் தேசியத்தலைவர் திரு வே.பிரபாகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

□ தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண்கள்பிரிவுத் தலைவி லெப். கேணல் அகிலா(சோமசுந்தரம்சத்தியதேவி மானிப்பாய்) சிறிலங்காஇராணுவத்துடனான மோதலில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளார்.

□ சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக் காரணமாக யாழ் பல்கலைக் கழகம் தற்காலிகமாக கிளிநொச்சிவிவசாயபீடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

□ தமிழீழமக்களுக்கு சேவையாற்றிவரும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு பலநாடுகளிலிருந்தும் உதவிகள்கிடைத்தவண்ணமிருக்கின்றன. தமிழ்நாட்டிலிருந்து மக்கள் லட்சக்கணக்கில் பணமும் உணவுப் பொருட்களும் வழங்கியுள்ளனர். அதேவேளையில் தமிழர்கள், காயமடைந்த தமிழர்களுக்குச் செலுத்துமாறு இரத்தமும் கொடுத்துள்ளனர்.

□ பிரித்தானியா அரசு இரண்டுகோடிரூபாவை வழங்கியுள்ளது.ஜேர்மன் அரசு ஒரு கோடியே பத்துலட்சம் ரூபாயை அன்பளிப்புச் செய்துள்ளது. ஆனால் எப்படி வடபகுதி மக்களுக்கு உதவுவதென செஞ்சிலுவைச்சங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கின்றது. சிறிலங்கா அரசு தமிழீழத் தமிழருக்கு எவருமே உதவக் கூடாதென்பதில் கண்டிப்பாக இருந்து வருகின்றது.

□ மத்தியகிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யசீத் அரபாத்துடன் ஒப்பந்தம்செய்துகொண்ட இஸ்ரவேல் பிரதம மந்திரி ரபீன் யூதர் ஒருவராலேயே படுகொலை செய்யப்பட்டார்.

□ போலந்தில் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு அலெக்சாண்டர் சுவாஸ்னியெஸ்கி 20.11.95 அன்று நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# சுதந்திரத்தின் சுவடுகள் 3

- எழிலன்

## இனவெறியுணர்வு செயற்கையானது. சுதந்திரவுணர்வு இயற்கையானது.

இனவழிப்பு நடவடிக்கைகளை உலகில் பல இனங்களும் தத்தம் தேவைகளைக் கருதி அங்கீகரிக்கப்பட்டவொரு ஒழுங்கு முறைபோல செயல்படுத்தி வருவதை உலக சரித்திரத்தின் இரத்தக்கறை படிந்த பக்கங்களைப் புரட்டும் போதெல்லாம் நமது கண்கள் கடந்து செல்வதைத் தடுத்தல் இயலாது. இந்த உணர்வின் பின்னணியில்இருக்கக்கூடியஇரக்கமின்மை – தயவின்மை – கொடுமை செய்யும் ஆர்வம் – அடுத்தவரின் அழிவில் பெறும் திருப்தி இன்னோரன்ன குணங்களின் வெளிப்பாடுகள் மனிதநேயத்தின் தேவையை – அவசியத்தை உணர வைக்கும்கருவிகளாகத்தான் காலப்போக்கில் உருமாற்றமடைகின்றனவென்றால் அது மிகையன்று.

பாதிப்பைத் தருபவனின் செயற்பாடுகளின் தாக்கத்தின் தாற்பரியம்தான் பாதிக்கப்படுபவனின் சிந்தனையைச் சரிவர இயங்க வைக்கின்றது. சலுகைக்கும் சுதந்திரத்திற்குமிடையிலான வித்தியாசத்தை உணரும் பக்குவம் வரும்வரையில் இனங்களின் உள்மன வெளிப்பாடுகள் வெளிப்படையாக வெளிப்படுவதில்லை. இதனால் விரோதியை விளங்கிக் கொள்ள முடியாத இனமானது தனது தனித்துவத்தை மறந்துவிடுகிறது. அதன் சக்தி அமுங்கிவிட – பலவீனம் அதனை ஆட்கொண்டு விடுகின்றது.

தன்னை உணராத இனம் தன்னால் உயராத படிக்கு தாழ்ந்து நிற்பதைத் தன்னை உணர்ந்த இனம் நிச்சயப்படுத்திக்கொள்வதற்காகவே ஒற்றுமை – பரஸ்பர புரிந்துணர்வு – இணைந்து வாழல் இப்படிப் புனைவொழுக்க நியதிகளைச் செயற்கையாகப் பரப்பிவருகின்றது. இலங்கையில் சிங்கள அரசின் தமிழ்மக்கள் மீதான அனுதாபம் – இரக்கம் – புரிந்துணர்வு – செயலிணக்கம் அனைத்துமே நூற்றுக்கு நூறுவீதம் தனது இனத்தின் நன்மையை மட்டுமே முன்னிருத்தி காட்டப்படும் பொய்யான படங்கள். இவற்றை நம்பினால் படிப்படியாகத் தமிழினம் அழியும். தற்காப்பு உணர்வு தரும் முன்னெச்சரிக்கையானது மட்டுமே தமிழினத்தை என்றென்றைக்கும் விழிப்புணர்வுடன் வைத்திருக்கும். இதைத்தான்

விடுதலை விரும்பிகளின் செயற்பாடுகளும்
நடவடிக்கைகளும் நிரூபித்துள்ளன.
நிரூபித்துவருகின்றன.
இனவெறியின் நடவடிக்கைகள் எதிரினத்தின்
அழிவில்தான் தனக்குப் பாதுகாப்பு என்ற பிழையான
தத்துவத்தை
அது கைக்கொள்ளும்படியான சூழலை
உருவாக்கிவிடுவதைத் தவிர்க்க முடியாது.காரணம் –
இனவெறியின் உள்ளுணர்வில் கோழைத்தனம்
நிறைந்திருப்பதுதான்.அதனால்தான் சுதந்திரங்கேட்கும்
சாதாரண மக்களை – அவர்கள் நிராயுதபாணிகள் எனத்
தெரிந்துகொண்டும் அரசபலம் பயங்கரவாதத்தைக்
கட்டவிழ்த்துவிட்டு அடக்க முயலுகின்றது.அதைத்
தாங்கத் தாங்க இயக்கம் எதிரியக்கமாக
மாற்றமடைகின்றது.தற்காப்புக்காக மக்கள் அரசு
பிரயோகித்த அதே வழியைத் தாமும் தெரிந்துகொள்ள
முற்படுகின்றார்கள்.இந்த இடத்தில்தான் ஒரு முக்கிய
விடயத்தை நாம் அவதானிக்க வேண்டும். அரசு எடுக்கும்
கொடிய – அசுர நடவடிக்கைகளுக்குச் சட்டம்
பாதுகாப்பு அளிக்கிற அதேவேளையில் அதையே மக்கள்
எடுத்தால் அது [illegible]
காட்டப்படுகின்[illegible]

Every action has a reaction என்பது ஒரு நியதியின்
வெளிப்பாடேயன்றி வேறல்ல. தென்னாபிரிக்க
வரலாற்றில்வெள்ளையரின் பாதங்கள் மிதிந்தபோது
அன்றைய கறுப்பரின மக்களுக்கு அதன் தாற்பரியம்
சரியாக விளங்காத காரணத்தாலேயே தமது நிலங்களை
இழந்து நின்றார்கள். விழித்துக் கொண்ட
அவர்களினமானது முதலில் தொடுத்த மாபெரும்
போரானது 1779ல்தான் கொழுந்துவிட் டெரிந்ததாம்.
.வெள்ளையரின் நிலவபகரிப்புப்பரவலாக்கத்தை
கேப் குடியேற்றத்திலிருந்து(Cape settlement) அவர்கள்
விரிவுபடுத்தியபோதே முதன்முதல் மிகப்பெரிய போர்
கறுப்பர்களால் அவர்கள்மீது தொடுக்கப்பட்டது. 1779
திலிருந்து நூறாண்டுகளுக்கும் மேலாக ஒன்பதுக்கும்
குறையாத பெரும் பயங்கர போர்கள் அன்றைய
வெள்ளைக் குடியேற்ற விவசாயிகட்டு எதிராக சோசா
(Xhosa) இன மக்களால் தொடுக்கப்பட்டன.
பெரும்படைகொண்டு அவர்கள் தமது தாக்குதல்களை
மிக்திறமையாக நடாத்தினார்கள்.
ஆனால்....அவர்களது ஈட்டிகளும் அம்புகளும்
குடியேற்றவாசிகளான வெள்ளையரின்
வெடிமருந்துகளுக்கு முன்
ஈடுகொடுக்க முடியவில்லை ஆள்பலத்திலவர்கள்

அதிகமாயிருந்தும் அந்த நவீன ஆயுதத்தின் சக்தி அவர்களைப் பெருமளவில் அழித்து ஒழித்து 19ம் நூற்றாண்டின் இறுதியளவில் சோசா இனத்தவரின் படைபலம் தோற்கடிக்கப்பட்டது. அவர்களைப் போலவே வீரப்போர் தொடுத்த மற்றொரு இனம் சூலு (Zulu) இனமாகும்.
நதால் (Natal) பகுதியில் அவர்கள் தொடுத்த புனிதப் போரானது பிரத்தானியரால் மிகப்பயங்கர இராணுவ வதைகொண்ட தோல்வியாக 1879ல் முறியடிக்கப்பட்டது.

பலம்குறைந்தால் என்ன நடக்கும்? எதிரிடம் பேசிப்பார்ப்பதுதானே வழி? அதாவது பேச்சுவார்த்தை என்ற வழியை
மட்டுமே நாடவேண்டிய நிலைமையைக் கறுப்பரின மக்களின் சமுதாயமானது கடைப்பிடிக்கத்துவங்கியது. இந்த இடத்தில்தான் சுதந்திரத்தின் வெற்றிக்கான அத்திவாரத்தில் கல்வியின் பங்களிப்பின் முக்கியத்தை நாம் காணக்கூடியதாகவிருக்கின்றது. ஆம். வனவாழ்வில் ஊறிய கறுப்பரின மக்கள் மத்தியில் வெள்ளையர் நுழைவின் பிறகு கல்வியின் நிழல் படத்துவங்கியது.
அதன் கார[redacted]தைத்து நீதி கேட்கும் வேட்[redacted] அல்லது
ஆர்வம் அல்லது முயற்சியின் வெளிப்பாடு முக்கியத்துவம் பெறலாயிற்று.

## பெறவும் காக்கவும் வழி தெரிய, கல்வி வேண்டும்!

வெற்றிக்கான சிந்தனையில் கல்வியின் பங்களிப்பு மகத்தானது. அதைப் பயன்படுத்தத் தொடங்கும் போதுதான் ஏகாதிபத்தியங்களின் பணபலமும் படைபலமும் அடக்குமுறைகளும் ஆட்டங்காணத்துவங்குகின்றன. இதைத்தான் "வீரம் விலை போகாது! விவேகம் துணைக்குவராவிட்டால்!" என்று கூறியிருக்கிறார்கள் போலும். விவேகம் கல்வியல்ல. ஆனால் விரைந்த சிந்தனைத் தெளிவுக்குக் கல்வியின் உதவி மிக மிகப் பயன்தரும்.
தமது மூதாதையர் உடல்பலத்தால் முயன்று,தோற்று இழந்ததை மீட்க, புதிய தலைமுறை உளபலத்தில் நம்பிக்கைவைத்துச் செயல்பட, அவர்களுக்குக் கல்வியின் பங்களிப்பு மிக முக்கிய தேவையாயிருந்தது. பல அரசியல் இயக்கங்கள் அவர்கள் மத்தியில் முளைவிடத் துவங்கினவென்றாலும் அவற்றின்

நோக்கமெல்லாம் வெள்ளையரிடம்
அனுசுப் பரஸ்பர புரிந்துணர்வுடன் வாழ வழி
தேடுவதிலேயே அக்கறை கொண்டிருந்தன.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கான கல்விக்கு முதலில்லமாகத் திகழ்ந்தது கிழக்கு கேப்(Eastern Capc)பகுதியாகும். அங்கிருந்துதான் கறுப்பினரின் அரசியல் சிந்தனைக்கான விழிப்புணர்ச்சி எழுந்ததெனலாம்.ஏனெனில் தென்னாபிரிக்கக் கறுப்பினரின் கல்விக்கு அங்கேதான் ஆரம்பம் கிடைத்தது.அங்கமைந்திருந்த கல்விபீடங்களான Fort Hare University,Lovedale Institute, 'Herald Town College போன்றவை பல பெரிய ஆபிரிக்கக் கறுப்பினத் தலைவர்களைஉருவாக்கிவிட்டன.தென்னாபிரிக்காவுக்கு மட்டுமல்ல கென்யா – தன்சானியா – மலாவி – சம்பியா போன்ற பல ஆபிரிக்க நாடுகளுக்கும் பயன்மிக்க பல தலைவர்களை இவை உருவாக்கித்தந்தன.முதல் சுதந்திரஇயக்கங்களின் தலைவர்களான டாக்டர் ஐபாவூ – டாக்டர்சூமா – மிசிம்பா – மக்கிவான – ருபுசானா – சோகா – டுபே – பெலேமி – குமேட – சேம் ஆகியோரையெல்லாம் சிந்தனைத் திரவியங்களாக உருவாக்கித்தந்த இந்த அரிய கல்வியகங்கள்தாம் பின்வந்த காலங்களில் அதாவது ஆபிரிக்கானர் தேசியக் கட்சியின் பதவியேற்பின் பிற்பாடு,(1948) அதன் இனவெறியாட்சித் தீ தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் அடிப்படையுரிமைகளையெல்லாம் பொசுக்கித் தள்ளத் துவங்கியதைத் தடுத்து நிறுத்த சுதந்திரத்தின் தண்மையை உணரச்செய்யத் தம்மையே தியாகத்தில் கருக்கிக்கொள்ளவும் தயங்காத மாபெரும் சக்திவாய்ந்த மேதைகளும் வீரர்களுமான **நெல்சன் மண்டேலா – ரொபட் சொபுக்வே** – மற்றும் **சுதந்திரச்சிந்தனைத்தெளிவின் வித்தான வீரன் பிக்கோ** ஆகியோரையும் உருவாக்கித்தந்தன. இம்மூன்று மாவீரர்களும் கிழக்கு கேப் பகுதியின்றே வந்தவர்கள்.

## வாக்குரிமையும் மக்களும்

உலகில் வாக்குரிமையின் பங்களிப்பு ஒவ்வொரு சமுதாயத்தினதும் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது.அதைச் சரியாக ஏற்று அனுமதித்தால் உலக சமாதானத்திற்கு 80 விதமான ஒத்துழைப்பு கிடைத்துவிடும். ஆனால் வாக்கனுமதிக்கும் அதிகாரத்தை, வாக்களிப்பின் நியாயத்தை விழையாத அரசுகளின் கொள்கைகளே மறுத்து வருகின்றன. மக்களின் அடிப்படை உரிமையான சுதந்திரத்தை, அவர்கள் தமக்காக – தமது சார்பில் – தம்மில்

ஒருவரை – தமது பிரதிநிதியாக அனுப்
மூலமாக நிறைவேற்றிக் கொள்ள கி
வாய்ப்பே வாக்குரிமையாகும். அதை
இருந்தும் இல்லாதவர்களாகவே இரு
நாட்டிலே வாக்குரிமை பெரும்பான்
துஷ்பிரயோகம் செய்யப்பட வாய்ப்பு
சந்தர்ப்பவாதிகளினால் வேண்டுமெ
கொடுக்கப்பட்டது. மக்களுக்குத் த
எதிர்காலம்பற்றிய சிந்தனையில்
தீர்க்கதரிசனமில்லாதவாறு படித்த
திட்டமிட்டு வழிவகுத்துவைத்தார்க
அதன் காரணமாகக் கட்சிகளில் நம்
மூலம் தமக்குப் பசி நீங்க வழி பிறக்கு
கிடைக்க வாய்ப்பு வரும் – ஏதோ கி
வரப்பிரசாதம் கிடைத்துவிடும் என்ற
எதிர்காலத்தை அடைவு வைக்கும்
மனப்பான்மை வளர்ந்துவர வழி வகு
அது அரசியலில் இலகுவாக முன்னே
அரசியல்வாதிகளுக்குப் பெரிதும் உத
மக்கள் அந்த உண்மையை உணரத்த
அன்றிலிருந்து முன்வீதைக்கப்பட்ட
சுதந்திரத்திற்குச் சாவுமணி அடிக்கப்
துவங்கிவிடும். அதைத் தான் தமிழின
தற்போதைக்கு அனுபவிக்கத் துவங்
**இந்த நிலை செயற்கையிலிருந்து**
**இயற்கை முனையும் செயற்பாட்டின்**
**வெளிப்பாடேயன்றி வேறல்ல. அத**
**செயற்கையான சமாதானம் மறைந்**
**உள்மனப் பகைமை வெளிப்படும் க**
**ஏற்பட்டிருக்கின்றது.** இவ்வரிகளை



க அனுப்பிவைப்பதன்
ள்ள கிடைக்கும்
. அதனை இழந்த மனிதர்
கவே இருக்கிறார்கள். நமது
நம்பான்மையினத்தால்
பாய்ப்பு அரசியல்
ண்டுமென்றே ஏற்படுத்திக்
க்குத் தமது
யில்
படித்த அரசியல்வாதிகள்
த்தார்கள்.
ளில் நம்பிக்கை வைப்பதன்
ழ் பிறக்கும் – தொழில்
தோ கிடைக்காத
ம் என்ற கற்பனையில் தமது
பக்கும் பரிதாபத்திற்குரிய
வழி வகுக்கப்பட்டது.
முன்னேற
தும் உதவியது. என்றைக்கு
ரைத்தலைப்பட்டனரோ
ப்பட்ட செயற்கைச்
அடிக்கப்பட்டத்
தமிழினம் இலங்கையில்
த் துவங்கியிருக்கிறது.
ருந்து மீண்டுவிட
பாட்டின்
ல. அதனாலேதான்
மறைந்து உண்மையாக
படும் கட்டாயம்
ரிகளை ஒருதடவையல்ல
பல தடவைகள் திரும்பத்திரும்ப வாசித்துப் பாருங்கள் அப்போதுதான் அது தெளிவாகப் புரியும். சிங்களவரின் இடத்திலல்ல தமிழரின் இடத்தில் தமிழரைக் காப்பதற்காகத் தமிழரைக் கொன்றொழித்தல் என்பது தமிழராலல்ல அவர்களது எதிர் இனத்தினால் முன்வைக்கப்பட்டிருக்கிற கொள்கையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தமிழரின் பாரம்பரிய நலம் பறிக்கப்படக்கூடாதென்ற நியாயத்தை ஒரு நாடு என்ற செயற்கையான கொள்கையினுள் போட்டு மூடி வைத்து அராஜகத்திற்கு நியாயம் கற்பிக்கப்படுகின்றது.. அதன் தற்போதைய வெற்றிக்குக் காரணமென்ன? தமது நிலத்தைபிரித்தானியன் விட்டுப்போகையில் மீட்டெடுத்துக் கொள்ளாமல் விட்ட பிழைதானே!

**அன்றைக்கே தமதுரிமையை விட்டுவிடாமல் தனித்துவத்தில் ஒற்றுமையை நிலைநாட்டியிருந்தால் அதற்காகச் செங்குருதி சிந்தப்பட்டிருந்தால் இன்றைய சந்ததி பலவீனமடைந்திருக்காது. பலம்தேடி தன்னைக்காத்துக்கொள்ள தவித்துக்கொண்டிருக்காது. அல்லவா! ஆக – இயற்கையான உரிமையை விட்டுக் கொடுத்தால் செயற்கையான அடிமைத்தனத்தை ஏற்கும்கட்டாயம் வந்து சேரும். அதைத்தான் தென்னாபிரிக்க கறுப்பரினம் பலம் வாய்ந்த வெள்ளையினத்திடமிருந்தும்கற்றது ஆம் – நம்மைச் சிங்கள இனம் தற்போது பார்க்கும் கண்ணோட்டம்தான் அன்றைய வெள்ளையரிடமும் இருந்தது**

–தொடரும்



***இந்துமகேஷ்*** எழுதும்

*விடைபெறும் நேரங்கள்.*

நெடுங்கதை

ஆண்டு மலரில்!

# யேசு மீண்டும் பிறக்கமாட்டாரா?

- கே.ஆர்.டேவிட்



பலிபீடத்தின் முன்னால் வந்துநின்ற பாதிரியார் ஆலயத்துள் நிறைந்திருந்த திரளான மக்கள் மீது தன்பார்வையை ஒருவினாடி செலுத்திவிட்டு தன் பிரசங்கத்தை ஆரம்பிக்கின்றார். வலதுகையை இலேசாகப் பொத்திப் பிடித்து உதட்டருகே வைத்து — செருமித் தனது குரலைச் சரிப்படுத்திக் கொள்கிறார்.

"அன்பானவர்களே! மனித இனத்தின் ஆன்மஈடேற்றத்திற்காக மண்ணில்பிறந்து போதனைகள் செய்து சாதனைகள் புரிந்து சிலுவையில் அறையுண்டு மரித்த தேவகுமாரனான யேசுநாதரின் பிறந்த தினமின்று. நத்தார்த் திருநாள்... அவரின் பிறப்பை மகிமைப்படுத்த நாமெல்லாம் இங்குகூடியிருக்கின்றோம். தேவன் தனது குமாரனையே தூதனாக்கி இந்த மண்ணில் பிறக்கவைத்த மேன்மைமிகு நாளின்று... நத்தார்த் திருநாள்... தேவன் மனிதனின் உடலையோ உடல் அலங்காரங் களையோ விரும்பவில்லை. மனிதனின் ஆன்ம சுத்தியையே விரும்புகின்றான்.. ஆடம்பரங்களும் அலங்காரங்களும் மனிதமனங்களை அலையவைக்கின்றன.உங்களுக்கு மேலுள்ளவர்களையே நீங்கள் விரும்புகின்றீர்கள். அணைக் கிறீர்கள். அவர்களைப்போலாகிவிட ஆசைப்படுகிறீர்கள். அதனால்தான் அலங்காரங்களையும் ஆடம்பரங் களையும் விரும்புகின்றீர்கள். அவைகளே உங்கள் மனங்களை அவஸ்தைப்படுத்துகின்றன.பொய்க் காலில்நடக்கின்றீர்கள். அதனால் தான் தளம்புகின்றீர்கள். சுயநலம் என்ற பிசாசுக்கு அடிமை ஆகுகின்றீர்கள்...."

— பிரசங்கத்தைநிறுத்திய பாதிரியார் தனது ஆட்காட்டிவிரலால் கண்ணாடியை மேல் நோக்கித் தள்ளிவிட்டு மீண்டும் வலதுகரத்தை மெதுவாக பொத்திப் பிடித்துச் செருமிக் கொள்கிறார்.
ஆலயத்துள் தெய்வீக அமைதி நிலவுகின்றது.
இன்று மார்கழிமாதம் 25ம் திகதி அதிகாலை ஆறுமணி. நத்தார்ப் பூசை நடந்து கொண்டிருக்கின்றது.

கொட்டடி வீதியும் நாவலர் வீதியும் காக்கைதீவு வீதியும் சந்திக்கின்ற முச்சந்தி. இந்த முச்சந்தியிலிருந்து காக்கைவீதியில் நடந்தால் எட்வினம்மா இறால் வாடி. அதைத்தாண்டினால் புனிதமரியாள் தேவாலயத்தை வந்தடையலாம். இங்குதான் பூசை நடந்து கொண்டிருக்கின்றது.
இப்பகுதியில் வாழ்கின்றவர்களில் தொண்ணூறுவீதமானவர்கள் கிறிஸ்தவர்கள். பசும்புற்றரையான பல ஏக்கர் நிலம். இந்த நிலத்தின் இடதுபக்க மேல் மூலையில் தேவாலயம். தேவாலய வாசலை அண்மித்துப் பரவைக் கடல். பரவைக் கடலின் சிறிய அலைகளால் பிரசவிக்கின்ற மூர்க்கத்தனமற்ற பசுமையான காற்று. வாசலில் ஓங்கி வளர்ந்துநிற்கும் மரங்களின் தாளலய அசைவுகள்...

குரலைச் சரிப்படுத்திக்கொண்ட பாதிரியார் தனது பிரசங்கத்தைத் தொடர்கின்றார்...
"அன்பானவர்களே! மனித மனங்களில் சமாதானத்தை ஏற்படுத்திவிட சருவேசுவரன் எவ்வளவோ முயன்றார். இறுதியில் தனது குமாரனான யேசுவை மனிதனாகப் பிறக்கவைத்து தனது கருத்துக்களை அவர் மூலம் வெளிப் படுத்தினார். ஆத்மாவின் இராகத்திற்கேற்பவே உடல் தாளம் போடவேண்டும். ஆனால் மனிதர்கள் தங்களின் மனத் தாளத்திற்கேற்பவே உடலைத் தாளம்போட வைக்கின்றனர். இதனால்தான் மனிதன் எதிர்பாராத பல சோதனைகளை அனுபவிக்க வேண்டி நேரிடுகின்றது. ஆன்மாவைப் பற்றிச் சிந்தியுங்கள். ஆன்மாவை வளப்படுத்துங்கள். ஆன்மாவைப் பலப்படுத்துங்கள். தூண்டில் போடுகிறவன் மிதப்பில் கண்ணாயிருப்பதுபோல நீங்களும் கண்ணாயிருங்கள். பரலோக இராச்சியம் உங்களை சமீபித்து வரும்.!"
— பாதிரியார் பிரசங்கத்தை முடித்து பூசையைத் தொடங்குகிறார்.

ஆலயத்தின் முன்பக்க வாசல் முழுமையாகத் திறந்துவிடப்பட்டிருக்கின்றது. சுவரோடு விடப்பட்டிருக்கும் கதவில் சாய்ந்தபடி அமர்ந்திருக்கின்றான் மரிசலின்.....
எலும்பும் தசையும் இணைந்த ஒரு தசைக் குவியல் போல் அவன் அமர்ந்திருக்கின்றானே தவிர அவனது சிந்தனை அவனது இதயத்தில் தோலுரிக்கப்பட்ட துயரவடுக்களின் நினைவுகளை உறுஞ்சிக் கொண்டிருந்தது.
கட்டையாக வெட்டப்பட்ட வாரி விடப்படாத தலைமயிர். கறுத்த தடித்த தொந்திவிழுந்த உடல். பழுப்பேறிய இந்திய நாலுமுழம். கண்ணசையான ஒரு சேட்.

சோகம் நிறைந்த முகம். இரவு முழுவதும் அவன் அழுதிருக்கவேண்டும். கண்களிரண்டும் சிவந்து வீங்கிப்போய்விட்டது. வலதுகைக்குள் செபமாலை மணிகள் குவிந்து போய்க்கிடக்கின்றது. இடது கையில் எரிந்து தூர்ந்து போன அரைகுறையான மெழுகுதிரி.

சென்ற வருடம் இதே மரிசலின்...

நத்தார்ப்பூசையன்று..

சகலரின் கண்களிலும் படும்படியாக பலிபீடத்திற்கருகே கம்பீரமாக நின்றான். இதே இந்தியநாலுமுழம். சங்கிலி தெரியவேண்டுமென்பதற்காக தைக்கப்பட்ட கண்ணறையான சேட். சேட் பைக்குள் நாசுக்காக திணிக்கப்பட்டிருக்கும் ஆயிரம் ரூபா நோட்டுக்கள். காலிலே 'பிளாற்போம்' செருப்புக்கள். கிறீம் வைத்து வாரிவிடப்பட்ட தலைமயிர். 'சென்ற்'வாசனை. துரைபோல் நின்றான்.

இன்று....

துவண்டு போய்வந்து ஆலயத்தின் வாசலோடு கடைசிமனிதனாக இருக்கின்றான்.

மரிசலீன் —

சம்மாட்டி மரிசலீன் என்று கூறினால் இக்கிராமத்தில் மட்டுமல்ல கடற்கரை யோரமாகவுள்ள சகல கிராமங்களிலும் அவனைத் தெரிந்துகொள்வார்கள். அவ்வளவு பிரபல்யமானவன்.

முச்சந்தியில் இருந்து நாவலர்றோட்டில் சென்றால் இப்பகுதிக்குரிய உபதபால் நிலையம். அதை மருவினாற்போல் ஒரு மெத்தைவீடு. இந்த வீட்டின் வாசலில் 'பொன்னில்லம்' என்ற எழுத்துக்கள். பெரிய அளவில் பொறிக்கப் பட்டிருக்கின்றது.

இதுதான் இவனது வீடு.

இரண்டு வருடங்களுக்குமுன்பு மாநகரசபை உறுப்பினனாகவும் இவன் இருந்தான்.

'மெம்பர் பொன்னில்லம்' இப்படியும் இவனைச்செல்லமாக அழைப்பார்கள். தொப்புள் குழியைத்தாண்டி நிற்கும் எட்டுப்பவுண் சங்கிலி போட்டு சேட்டையும் திறந்துவிட்டு சிகரட் பைக்கற்றுடன் மரிசலீன் நடந்து வந்தால் அதிலொரு தனகர்த்த தனம் தொனிக்கும்.

வருடப்பிறப்பு வந்துவிட்டால் தனித்து ஒரு கிடாய் வெட்டி மரிசலீன் வீட்டில் பெரியதொரு சமையல் நடக்கும்.

எடுபிடி வேலைசெய்ய ஒரு கூட்டம்....

கை விசேசம் வாங்க ஒரு கூட்டம்....

கைகளில் பெட்டிகளுடன் சாப்பாடு வாங்க கேற்றடியில் ஒரு கூட்டம்....

இப்படிப் பலர் நிற்பார்கள்!

இராச தர்பார் நடக்கும்.

இன்று அதே மரிசலீன்....தனிமரமாய் இறுதிவரிசையில்.....

கண்ணீருடன் பரதேசிக் கோலத்தில்!

மூன்று மாதங்களுக்கு முன்பு.

அன்றொரு நாள் ஊரே அல்லோல கல்லோலப்பட்டது.

மூட்டை முடிச்சுக்களுடன் மக்கள் இடம்பெயர்ந்து ஓடிக்கொண்டிருந்தனர். மரிசலீனும் தன் மனைவி, ஐந்துபிள்ளைகள், தாய் தகப்பன், அனைவரையும் ஒரு காரில் ஏற்றி அனுப்பிவிட்டு தான் மட்டும் நாளைவருவதாகக் கூறி

வீட்டில நின்றான்.
அதேநாள் மாலை இரண்டு மணியளவில் தனக்கு இப்படியொரு செய்தி வருமென்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.
அவர்கள் பிரயாணம்செய்த கார் தாக்குதலுக்குள்ளாகி சின்னாபின்னமாகி கார்ச்சாரதி உட்பட அனைவரும் அதே இடத்தில் இறந்துபோயினர்.
ஒன்பது உடல்களும் ஒன்பது பெட்டிகளில் வரிசையாக வைக்கப்பட்டு இதே ஆலயத்தில் இதே பாதிரியாரால் பூசை வைக்கப்பட்டு இடுகாட்டிற்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு...ஒன்பது கிடங்குகளில் ஒன்பது பிணங்களும் வைக்கப்பட்டு...
இடது கையிலிருந்த துவாயால் தனது வாயைப் பொத்தியபடி வலது கையால் ஒன்பதுபிடி மண்கிள்ளி உரிமை மண் போட்ட காட்சி....
இந்நிகழ்வோடு சோர்ந்து போனவன் இன்னும் நிமிரவில்லை.

கதவோடு சாய்ந்தபடி மரிசலீன் அமர்ந்திருக்கின்றான்.
பூசை முடிந்தது.
மக்கள் எல்லோரும் போய்விட்டனர்.
ஆலயத்துள் மரிசலீன் மட்டும் இருக்கின்றான்.
"மரிசலீன்!"
—அங்கு வந்த பாதிரியார் குனிந்து அவனது முதுகைத்தடவுகிறார்.
மரிசலீன் உணர்வுபெறுகிறான்.பனித்திருந்த கண்ணீர் துளிகளாய் கன்னத்தில் வடிகின்றது.
"சுவாமி...."
"மரிசலீன்... கண்களைத் துடைத்துக் கொள்...."
"சுவாமி நான் பட்டமரமாகி விட்டேன்!"
"மனதைத் திடப்படுத்திக்கொள் மரிசலீன்....!"
"ஐயா...!"
—இதுவரை சுவாமி என்றழைத்தவன் மனவேதனையால் மிகவும் கீழிறங்கி ஐயா என்றழைக்கிறான்.
வெதும்பிய மாங்காய்போல அவனது நாடித்தோல்சுருங்க அவனது உதடுகள் வேதனையால் துடிக்கின்றன.
அவனது முகத்தில் உள்ள துயர உணர்வுகளைக் கிழித்துக்கொண்டு கேள்வி உணர்வொன்று மேலோங்கித் தெரிகின்றது.
"என்ன மரிசலீன்?"
"யேசு மீண்டும் பிறக்கமாட்டாரா?"
திடீரென்று அவன் கேட்கின்றான்.
மனிதர்களிடம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தேவகுமாரன் யேசு மனிதனாகப் பிறந்ததினத்தில் யேசு மீண்டும் பிறக்கவேண்டுமென்று மரிசலீன் விரும்புகிறான்.
இப்படியொரு கேள்வியை பாதிரியார் எதிர்பார்க்கவில்லை.
பாதிரியார் ஆச்சரியத்தோடு மரிசலீனைப் பார்க்கிறார்.
கிணற்றுள் பாறாங்கல் வீழ்ந்து அந்த அதிர்வில் கிணற்றின் அடியிலுள்ள துகள்கள் தண்ணீரில் மிதந்து தண்ணீர்கலங்குவதுபோல் பாதிரியாரின் மனம் கலங்குகின்றது.

இதுவரை யாருமே கேட்காத கேள்வி...
பாதிரியார் கேள்விக்குறியோடு மரிசலீனைப் பார்க்கிறார்.

"ஐயா...யேசு மீண்டும் பிறக்கமாட்டாரா?"
— அவன் திரும்பவும் கேட்கின்றான்.
"ஏன் மரிசலீன் அப்படிக் கேட்கின்றாய்?"
"நான் யேசு நாதரிடம் ஒரு கேள்வி கேட்கப் போகின்றேன்..."
மரிசலீன் அழுகின்றான்.
"என்ன கேள்வி மரிசலீன்?"
"ஐயா மிகப்பெரிய வெளிச்சத்தில் வாழ்ந்த நான் ஒளியே புகமுடியாத இருட்டறைக்குள்ளை நிற்கிறன்... என்னாலை ஒண்டையுமே உணர முடியேல்லை.... மனிதவாழ்க்கையிலை உண்மைஎது எண்டு அவரிட்டைக் கேட்கப்போறன்..."
மரிசலீன் கூறுகின்றான்.
துயரத்தின் எல்லையில் நிற்கின்ற மனிதனிடம் இரண்டு தீர்மானங்கள்தான் ஏற்படும்.
ஒன்று ஆன்மாவைத் துறப்பது.
இரண்டு ஆன்மீக விளக்கத்தை வேண்டுவது.
மரிசலீன் ஆன்மீக விளக்கத்தைக் கேட்கிறான். பாதிரியார் அவனைப் புரிந்து கொள்கிறார்.
கண் வெட்டாமல் மரிசலினை சிலநிநாடிகள் பார்த்த பாதிரியார் இதிலிருந்து விடுபட்டு பலிபீடத்தின் பின்னாலுள்ள சுவரில் சிலுவையில் அறையப்பட்ட நிலையில் தொங்கிக் கொண்டிருக்கும் யேசுவின் சிலையைப் பார்க்கிறார். யேசுவின் போதனைகள் பாதிரியாரின் காதுகளில் ரீங்காரமாய் ஒலிக்கின்றன. வாசலில்நின்றிருந்த பாதிரியார் கைகள் இரண்டையும் பின்பக்கமாக வைத்து விரல்களைப்பின்னி தலையைத்தாழ்த்தியபடி பலிபீடத்தைநோக்கி நடக்கின்றார்.
ஆமை வேக நடை.
சீமந்துநிலத்தில் அவரதுபாதணிகள் தேய்படுகின்ற மந்தமான ஓசை...
பாதிரியாரின் இதயம் மரிசலீனின் இதயத்தை மானசீகமாகச் சத்திர சிகிச்சை செய்து அவனது இதய நிலையை ஆய்வு செய்கின்றது.
ஆத்மாவின் இராகமும்....
உடல் தாளமும்...
வெளியுலக ஆசைகளுக்கேற்ப அவனது உடற்தாளம் அமைந்திருந்தது...
உடற் தாளத்துக்கேற்ப ஆத்மாவின் இராகத்தையும் இசைக்க வைத்தான்...
இப்போது...
ஆத்மாவின் இராகத்திற்கேற்ப உடற் தாளத்தைப் போடத் துடிக்கிறான்....
அதை அவனால் புரிந்து கொள்ளமுடியவில்லை.
அவனது உடலிலுள்ள ஊனக்கண் மங்கி இதயத்திலுள்ள ஞானக்கண் பிறந்த நாய்க்குட்டியின் கண்கள் துடிப்பதைப்போல் துடிக்கின்றது.
அதனால்தான் அவன் வாழ்க்கையின் உண்மையைக் கேட்கின்றான்...
பாதிரியார் மரிசலீனின் மனதை உணர்கிறார்.
பலிபீடத்தின் முன்னால்நின்ற பாதிரியார் அங்கிருந்து புறப்பட்டுத் திரும்பவும் மரிசலீனை நோக்கி வருகின்றார்.
கைகள் இரண்டும் பின்னால் கட்டப்பட்டு பாதணிகளின் சத்தம்...
ஆலயவாசலுக்கு வந்த பாதிரியார் கடலைப் பார்க்கிறார். எத்தனையோ விதமான நீரோட்டங்கள் கடலில்வந்து சங்கமிக்கின்றன. ஆனால் கடல்நீர் இதுவரையில் தன் உப்புத்தன்மையை இழந்ததில்லை. அது மட்டுமல்ல கடற்பரப்பில் மேடுபள்ளங்களில்லை.

அன்றிலிருந்து இன்று வரை சீரான மாறாத அமைப்பு....

பின்னால் வைக்கப்பட்ட கைகள் இன்னும் அப்படியே கிடக்கின்றன.
பாதிரியார் கடலைப் பார்த்தபடி நிற்கிறார்.
"மரிசலீன்...!"
— மேற்குரலால் பாதிரியார் மரிசலீனை அழைக்கிறார்.
"ஐயா..?"
"வாழ்க்கையின் உண்மையைத்தானே கேட்கிறாய்?"
"ஓம் ஐயா அதைத்தான் கேட்கிறேன்...எனக்கு எதுவுமே புரியவில்லை...!"
— குரல் தளதளக்க அவன் கூறுகின்றான்..
"துயரங்கள்தான் ஞானக்கண்ணின் திறவுகோல்கள்...உனது இதயத்தில் திறவுகோல்கள் போடப்பட்டுவிட்டன... உனது ஞானக்கண்ணை மூடியிருக்கும் இமைகள் துடிக்கின்றன...இனிமேல் நீயாகவே சகலத்தையும் புரிந்துகொள்வாய்! சுவையான உணவு...அழகானஉடை.... வசதியான உறைவிடம்... உன்னைப்போன்றவர்களினதும் உன்னைவிட மேலானவைகளினதும் உறவு... இதுவரைகாலமும் நீ கண்ட உலகம் இதுதான்... தலைமயிரை எவ்வளவு தூரம் அழகுபடுத்துகிறீர்கள்... ஆனால் தலையிலிருந்து மயிர் உதிர்ந்து விட்டால் எவ்வளவு தூரம் அருவருக்கின்றீர்கள்... நகங்களை எவ்வளவு தூரம் வர்ணம்தீட்டி அழகுபடுத்துகிறீர்கள்...ஆனால் அதை வெட்டும்போது வீட்டுக்கு வெளியே போய்நின்றுதான் வெட்டுகிறீர்கள்... மனிதன் உயிரோடு இருக்கும்போது அணைக்கிறீர்கள்...இறந்துவிட்டால் அருகில் போகக் கூச்சப்படுகிறீர்கள்...மரிசலீன்... இதுதான் மனித வாழ்க்கை...!"
இப்படிக் கூறிய பாதிரியார் கோயில்வாசலிலிருந்து நிலத்தில் இறங்கி குனிந்து ஒருபிடி மண்ணை அள்ளி எடுக்கின்றார்.
"மரிசலீன் இதைப்பார்!"
தன் கையிலுள்ள மண்ணைக் காட்டுகிறார்.
மரிசலீன் பாதிரியாரின் கையிலுள்ள மண்ணைப் பார்க்கின்றான்.
"உனது குடும்பத்திலுள்ளவர்கள் இறந்து மண்ணாகி விட்டனர்... நீயும் மண்ணாகப் போகின்றாய்...நானும் மண்ணாகப் போகின்றேன்... சகலருமே மண்ணாகத்தான்போகின்றார்கள்...இது உலக நியதி... இதை யாராலும் வெல்ல முடியாது...தாயின் கருவறையில் உதயமாகுகின்ற ஒரு மனிதனின் வாழ்க்கை கல்லறையில் அஸ்தமனமாகின்றது. இது நிரந்தரமற்ற இந்த உடல் வாழ்க்கையின் நியதி.... ஆனால் சிலர் கல்லறையில்தான் கருவாகுகின்றார்கள்... இவர்களது ஜனனம் நிரந்தரமானது....அவர்களுக்கு மரணமில்லை....இவர்களில் ஒருவர்தான் யேசுநாதர்... அவர் இன்னும் வாழ்கிறார்... வறுமைப்பட்டவர்களின் இதயங்களில்... வேதனையால் வதங்கிப் போனவர்களின் இதயங்களில்... அடிமைப்படுவோரின் இதயங்களில் அவர் வாழ்கிறார்... அவர்கள் மத்தியில்தான் அவர் வாழ்ந்தார்... அவர்களுக்குத்தான் அவர் தொண்டு செய்தார்.... அவர்களுக்குத்தான் போதித்தார்... அவர்களுக்காகவே சிலுவையில் மரித்தார்.... மரிசலீன்... நிலைக் கண்ணாடியில் உனது உடல் உருவத்தைப் பார்ப்பதுபோல் உனக்குக் கீழ் உள்ளவர்களின் இதயக்கண்ணாடியில் உன் இதயத்தைப்பார்... உனக்குக் கீழ் உள்ளவர்களுக்குத் தொண்டுசெய்... சோர்ந்து போகாமல் தொண்டுசெய்... அவர்களோடு நீ சங்கமமாகிவிடு... அவர்களது இதயக்கண்ணாடியில் உனது

இதயம் தெரியும்... சீவியத்தில் உன்னை நேசித்தவர்கள் மரணத்தின் பின்பும் உன்னை நேசிப்பார்கள்.... துயரங்களை ஏற்றுக் கொள்... தியாகங்களைச் சுமந்து கொள்... மரணத்தை வென்று வாழ்வாய்...இதுதான் வாழ்க்கையின் உண்மை...!"

பாதிரியார் கூறி முடித்துவிட்டு மரிசலீனைப் பார்க்கிறார்.

மரிசலீன் இப்போது அழவில்லை....

பாதிரியார் தன் அறையை நோக்கி நடக்கின்றார்...

□□□

நன்றி, — கலைமுகம்







*என்னிடம் எந்த வலையுமில்லை*
*உன்னை வீசிப்பிடிக்க.*
*நீயும் வெறும் மீனுமல்ல*
*துள்ளிக் குதிக்க.*
*பாசநீரூற்றுத்தான் மனிதர்கள்*
*அன்பைத் தெரியப்படுத்தினாய்.*
*அங்கீகரித்தேன்*
*அலட்சியம்செய்யவில்லை.*
*என் உயிரும் உன்னோடுதான் என்றாய்.*
*அலட்டிக்கொள்ளவில்லை*
*அமைதிகொண்டேன்*
*பிறிதொருநாள்*
*என்னை மறந்துவிடுங்கள் என்றாய்*
*மறப்பது மனித இயல்பு*
*மறக்க முடியாததை*
*மறக்கச்சொல்கிறாயா? என்றேன்.*
*மறந்துதான் ஆகவேண்டும் என்றாய்.*
*ஏன்..?*
*கேள்விகேட்குமுன்னே*
*நீ சென்றுவிட்டாய்!*

— க. ஸ்ரீதாஸ்.

பூவரசு ஐப்பசி இதழ் அட்டைப்
படத்துக்கான மற்றொரு கவிதை!

# பணியில் அவளும் இணைவாள் பாரும்



*வீடு என்று சொல்வதற்காய்*
*இருந்ததன்று ஒரு குடிசை*
*நாடு எங்கள் ஈழமென்று*
*சொல்லி நின்ற திளம்வரிசை*
*காடு மேடு என்று இன்றி*
*நேரம் இன்றிக் களம்புகுந்தே*
*பாடுகின்ற வீர நாதம்*
*கேட்டு ஓடும் படைகளங்கே...*
*வாடுகின்ற ஏழைமக்கள்*
*இல்லந்தன்னில் இடிவிழுத்தி*
*தேடுகின்ற புலிகள் தம்மைக்*
*கொன்றொழித்ததாய்க் களிக்க*
*பாடுபட்டுச் சேர்த்த சின்னச்*
*சொத்துமின்றி அழித்த பாவம்*
*கேடுகெட்ட அவ்வினத்தை*
*'அவன்' கரத்தால் அழியச் செய்யும்.*

*குந்துதற்கும் இடமில்லாமல்*
*கந்தலோடு பாதைதன்னில்*
*சிந்தைதன்னில் தாய் மறைந்த*
*கொடுமைகண்டு உளந்துடிக்க*
*குந்தியுள்ளம் நொந்திருக்கும்*
*சிறுமியவள் பசியுணர்ந்து*
*அந்தப் பக்கம் தாண்டிப்போகும்*
*பெண்ணும் உணரல் இல்லையன்றோ*
*சொந்த அன்னை ஆலயத்துள்*
*அபயம் தேடிச் சென்ற காலை*
*சொன்ன பாவி போட்ட குண்டில்*
*சின்னம் இன்றிச் சிதறிப் போனாள்.*
*.என்னசெய்ய எங்குசெல்ல,*
*கேட்குதந்தப் பிஞ்சு உள்ளம்.*
*அன்னையவள் ஆண்டவனின்*
*அருகிருந்தே பார்க்கிறாளோ?*

*ஆலயத்தைத்தானழித்தார்*
*மனிதவுருப் பேய்களன்று*
*பாலகர்கள் படிப்பதுவும்*
*பயங்கரமா என்னவென்றாம்*
*பாலகர்தம் பள்ளியிலும்*
*பணிந்து வந்து உயிர்பறித்தார்.*
*பால்கொடுத்த தாயருள்ளம்*
*பரிதவிக்க இடம் வகுத்தார்.*
*நீலவானம் சிவப்புவாகும்*
*ஈழமண்ணை நெருங்கி வந்தால்*
*காலம்மாறும் காலை இந்த*
*மண்ணின் காதை உண்மை சொல்லும்*
*ஞாலம் சொல்லும் தாய்மை மென்மை!*
*ஆளும் பெண்ணின் உள்ளம் பேய்மை!*
*காலம் வெல்லும் ஈழம் வெல்லும்*
*கயவர்கொள்கை சிதறிப் போகும்*

*பனைகள் ஓங்கி வளர்ந்த நாடு*
*புலிகள் பயிலும் பயிற்சி வீடு*
*உனையும் எனையும் உலகத்தமிழன்*
*மானம்பற்றிச் சொல்லும்நாடு*
*வினையைச் செய்தார் விழிகள்கூட*
*வியப்பால் திகைக்கச் செய்யும் வீரம்.*
*தனையே உருவாய்ச்சுமக்கும் எங்கள்*
*தலைவன் வழியில் வீரம் கொழிக்கும்.*
*உனையே அண்ணா புலியே வாவா*
*எனவே அழைத்தே உடன் பிறப்பாவாள்*
*தனையே பிரித்து அன்னையைப் பறித்த*
*அன்னியர் விழ கரும்புலியாவாள்*
*தனையே ஆளும் தனித்துவமின்றேல்*
*தமிழன் மானம் அழிந்தே போகும்*
*தனையே அழித்தும் தாயகம் மீட்கும்*
*பணியில் அவளும் இணைவாள் பாரும்!*

**— எழிலன்.**

# அவள் தான் இவள்.

செக்கச் சிவந்த சிங்கார மேனிதனில்
சொக்கனையும் சொக்கவைக்கும்
செந்தூரப் பட்டுடுத்தி
சிக்கலான கூந்தலுக்கும் தக்கபடி நெய்தடவி
பின்னி முடித்த சடை பின்னங்கால் வரைதவழ
எட்டி நடந்தால் ஒடிந்துவிடும் இடை என்பதால்
கட்டில்வரைக்கும் கால்மேல் கால்வைத்து
'மெல்லவே போ' என்று மெதுவாகக் காதில் ஓதி
பால் கிண்ணம் பழம் கொடுத்து
பாவையவள் கன்னத்தை
செல்லமாகக் கிள்ளிவிட்டு
சீண்டியே நிற்பர் சினேகத்தார்.

சிங்காரப் பெண்ணவளும் செல்லமாகச் சினம்கொண்டு
தங்கம் வைரம் தனிவீடு காசு என்று சீர்கொண்ட சீமானிடம்
மங்கலான வெளிச்சத்திலும் மறுதலிப்பு ஏதுமின்றி
அங்கம் நடுநடுங்க அருகுசென்று நாணத்தோடு
தங்கத் தலைவன் தாள் பணிந்து
தன்வாழ்வு தொடக்கி வைக்கும்
தமிழ் மகளை நாமறிவோம்.

ஆனால் இன்று...!
தங்கக்கரைபோட்ட தாவணியை உடுத்த மகள்
சிங்கம்போல் வீறு கொள்ள சீருடை அணிந்து கொண்டு
எங்களுக்கும் ஓர் நிலம் ஏனிருக்கக் கூடாதென்று
சிங்களப் படைதன்னை சிதறடிக்கும் நிலையாகும்.

சுட்டெரிக்கும் சுடர்தன்னை விட்டெறியும் கதிரவனும்
விட்டெறிக்கும் ஷெல்தன்னை வீசுகின்ற கயவர்களும்
அம்மகளின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல்
ஓடியே ஒளிந்துவிடும் நிலையாகும்.

தமிழர் பண்பாட்டை பாரறிய செய்த மகள் — இவர்கள்
தம்நாட்டை மீட்டெடுக்கும் பணிதன்னில்
தன்னுயிரும் தான் கொடுத்து
தமிழ்மகள் வீரத்தைத் தரணிக்குக் காட்டிய‌ந்த
புலிமகள் புகழ்தன்னை போற்றியே நீ வாழு!

— க. அருள்நாதன்

# படித்ததில் கிடைத்தது.

மனித உறவுகளின் இனிமை வாழ்வில் மகிழ்ச்சியைக் கூட்டுகிறது. வாழ்வை அர்த்தமுள்ளதாக்குகிறது.

'என் குழந்தைக்காக உயிர் வாழ்கிறேன். என் காதலிக்காக எதையும் செய்வேன். என் தங்கைக்காக இந்தத் தியாகத்தை மேற்கொண்டேன்.என்னைவளர்த்த பெற்றோருக்காகக் கட்டுப்பட்டேன்.' என்று மக்கள் தினந்தோறும் பேசுவதைக் காண்கிறோம்.

அவர்களெல்லாம் தியாக உணர்வால் — தன்னை மீறியவர்களாக — நமக்குப்படுகிறார்கள். எது அவர்களை அப்படிப் பேசச்செய்கிறது என்பதைக் கொஞ்சம் சிந்தியுங்கள்.

அன்பின் கனத்தை உணர்வீர்கள்.

உலகம் பூராவும் தங்கள் கொள்கைகளைப் பரப்பிய புத்தர் பிரானையும் ஏசுவையும் சங்கரரையும் ஒருகணம் எண்ணிப் பாருங்கள். எப்படித் தங்கள் கொள்கைகளை அவர்கள் மக்களிடையே பரப்பினார்கள்? அன்பால் பரப்பினார்கள். உண்மையின் தெறிப்பால் அந்த விதைகள் உலகெங்கும் போய் விழுந்து பிடிப்புக் கொண்டன.

அந்த மகான்கள் — அறிஞர்கள் — போய்விட்ட பின்னும் எது நம்மைத் தொட்டுக்கொண்டிருக்கிறது?

அவர்கள் உபதேசித்த சொற்கள். அந்தச் சொற்களில் நிற்கும் ஜீவன். அவைதான் பகவத்கீதையிலும் பைபிளிலும் தம்மபதத்திலும் இன்றும் நின்று நம்முடன் பேசிக் கொண்டிருக்கின்றன.

சொற்களின்மூலம் உறவுகளை அவர்கள் வளர்த்தார்கள்.

மனித உறவுகளின் பிணைப்பு எங்கே சிக்கலாகிறது? எங்கே நெருடலாக மாறுகிறது. மனஸ்தாபமாகத் துவங்குகிறது என்று பார்த்தோமானால் அவை எல்லாம் அனேகமாக தான் என்ற முனைப்பில் முளைவிடுவதைக் காணலாம்.

'நான் சொன்னபடி செய்!' என்று கணவன் அதட்டுகிறான். 'நான் சொல்வதைக் கேள்!' என்று பெற்றோர் கண்டிக்கிறார்கள். 'என்கொள்கைதான் சரி!' என்று வாதிடுகிறான் கட்சிக்காரன். 'என் மதக் கொள்கைகளில்தான் உண்மை இருக்கிறது!' என்கிறான் மதப் பற்றுடையவன்.

'தான் என்ற முனைப்பு' நமது உறவுகளின் சமநிலையைப் பாதிக்கிறது. 'நாம் எல்லோரும் சமம்' என்ற உணர்வு நமது உறவுகளின் சமநிலையை வளர்க்கிறது.

(டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி எழுதிய மனித உறவுகள் நூலிலிருந்து)

# எங்கள் இளந்தளிர்கள்



பாலும் சோறும் உண்ணத் தந்து
படிக்கச்சொல்லும் அம்மா
காலுங் கையும் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா

புழுதி போக்கி நீரும் ஆட்டிப்
பொட்டும் வைக்கும் அம்மா
அழுதிடாமற் பள்ளிக்கூடம்
அடையச் சொல்லும் அம்மா

கட்டி அணைத்து மடியில் வைத்துக்
கதைகள் சொல்லும் அம்மா
சட்டை அணிந்து செருப்பும் மாட்டித்
தலையும் சீவும் அம்மா

பள்ளிக் கூடம் விட்ட நேரம்
பாதி வழிக்கு வந்து
துள்ளிக் குதிக்கும் என்னைத்தூக்கி
தோளில் வைக்கும் அம்மா.



ஒரு பெரிய அடர்ந்த காடு!.
அந்தக் காட்டினுள்ளிருந்த குளத்தைச்சுற்றி நிறையக் கொக்குகள் வசித்துவந்தன.

அந்தக் கொக்குகள் வசித்துவந்த இடத்தினிலே ஒருநாள் ஒரு பெரிய இராட்சதப் பறவையொன்று மயங்கி வீழ்ந்தது. அந்த இராட்சதப் பறவை தமது எதிரியெனத் தெரிந்தும் அதன்மீது இரக்கம்கொண்ட கொக்குகள் தங்களால் இயன்ற உதவிகளைச்செய்து அதனைக் காப்பாற்றின.

காப்பாற்றப்பட்ட இராட்சதப்பறவை அந்தக் கொக்குகளைப் பார்த்துக் கண்ணீர்விட்டு அழுதது.

"இப்போது நீ எதற்காக அழுகிறாய்? உனது துன்பம் என்ன? எங்களிடம் சொல்லு! எங்களால் இயலக்கூடிய உதவியை உனக்குச் செய்கிறோம்!" என்று கொக்குகள் கேட்டன.

# தஞ்சமடைந்த வஞ்சம்



இராட்சதப் பறவை சொன்னது,—

"முன் நாட்களில் எனது அப்பாவும் அவரது கூட்டாளிகளும் உங்கள் இனத்தைக் கொத்திக்கொத்திக் கொடுமைகள் செய்து முற்றாய் அழிக்க முயன்றார்கள். சிலகாலத்தின் பின் எனது அம்மாவும் அவரது உறவினர்களும் அதேபோல இரக்கமின்றி உங்கள் இனத்துக்குக் கொடுமைகள் செய்தார்கள். அதை இப்போது எண்ணிப்பார்த்தேன் என்னால் துயரம் தாளமுடியவில்லை!"

இராட்சதப்பறவை இப்படிச்சொன்னதும் கொக்குகள் அதன்மீது மேலும் இரக்கப்பட்டன.

"பாவம்! முள்ளில் வளர்ந்த ரோசாவைப் போல நீ! இப்படி எங்களுக்கு நடந்த கொடுமைகளை எண்ணித் துடிக்கிறாயே! அதுவே போதும்! உன்மனதை நாங்கள் புரிந்து கொண்டோம்! இனி நீ எங்களுடன் வாழலாம்! உனது உணவுக்கு வேண்டிய மீனகளையெல்லாம் நாங்கள் உனக்குக் காட்டுகிறோம்!" என்று ஆறுதல் சொல்லின.

இராட்சதப்பறவையும் மகிழ்ச்சியடைந்து,

"பிரியமான கொக்குகளே!இனிமேல் நான் இரக்கமில்லாத என் இனத்தவருடன் சேரமாட்டேன்! அவர்கள் உங்களுக்குச் செய்த கொடுமைகளுக்கெல்லாம் என்றைக்காவது நான் அவர்களைப் பழிவாங்குவேன்! நாங்கள் ஒற்றுமையாக இருப்போம்!" என்றது.

"பழிக்குப் பழிவாங்குவது அல்ல எங்கள் நோக்கம்.இந்த அடர்ந்தகாட்டில் இந்தக் குளக்கரைப்பகுதி எங்களுக்கே சொந்தமானது. பல ஆண்டுகாலமாக எங்கள் பரம்பரை குடியிருந்த காடு,குளம், நாங்கள் பிறந்துவளர்ந்த பகுதி. இங்கே இனிமேலாவது எங்களை நிம்மதியாக வாழ விட்டால் அதுவே எங்களுக்குப் போதுமானது. நீ யாரையும் பழிவாங்க வேண்டியதில்லை!" என்றன கொக்குகள்.

இராட்சதப்பறவையும் அவைகள் சொன்னதை ஏற்றுக் கொண்டு அவற்றுடன் அன்பாய் இருந்தது.

சிலநாட்கள் சென்றன.

நாளாக ஆக அங்கிருந்த கொக்குகளின் எண்ணிக்கை மெள்ளமெள்ளக் குறையத்தொடங்கிற்று.

இராட்சதப் பறவையே அதற்குக் காரணம் என அறிந்த சில துணிவுள்ள கொக்குகள் அதனிடம் போய், —

"இராட்சதப்பறவையே! நீ செய்வது நியாயமா? உன் பெற்றோர் செய்த கொடுமையையே நீயும் செய்யலாமா?" என நீதி கேட்டன.

ஆனால் வல்லமைமிக்க அந்தப் பறவையோ இவைகளைக் கொத்திக்கொத்திக் கொன்றது.


ஏனைய கொக்குகளில் சில தங்களுக்குள் ஒரு கூட்டம் நடாத்தின.

"இது எங்களுக்குச்சொந்தமான இடம். நாங்கள் பிறந்து வளர்ந்த இடம். இந்த இராட்சதப்பறவை தனது தாய்தகப்பனைப்போல எங்களைக் கொடுமைகள் செய்து அழிக்கும் திட்டத்துடனேயே வந்திருக்கிறது. நாங்கள்

தப்பிக்கொள்ளவழியில்லையே.ஒற்றுமையாக எல்லோரும் சேர்ந்து இராட்சதப்பறவையைக் கொன்றொழித்தால்தான் எங்களுக்கு சுதந்திரமான வாழ்வு கிடைக்கும்!" எனத் தீர்மானித்தன.

அவற்றுள் சில கொக்குகளோ
"ஐயையோ...எங்களால் முடியாது.இந்த இடம்வேண்டாம். நாங்கள் எங்காவது கடற்கரைப்பக்கமாகப் பறந்து போகப்போகின்றோம்!" என்றன.
"எங்களுக்குச்சொந்தமான இந்த இடத்தைவிட்டு ஓடித் தப்புவது கோழைத்தனம். அப்படி ஓடினாலும் எங்கே எப்படி சுதந்திரமாக வாழப்போகிறீர்கள்?" என்று சில துணிவுள்ள கொக்குகள் கேட்டன.
"கடற்கரையோரமாகப் போய் நாங்கள் குடியிருக்கப் போகின்றோம்! என்றோ ஒருநாள் கடல் நீர் வற்றும். அத்தனை விதம்விதமான மீன்களும் எமக்குத்தானே! கடல் வற்றியபின் அந்த நிலமும் எங்களுக்குத்தான் சொந்தம்! அங்கே சுதந்திரமாக வாழுவோம்!" என்று கூறி அவை பறந்து விட்டன.

நாளுக்கு நாள் இராட்சதப்பறவையின் கொடுமைகள் தாங்காது வெள்ளைக் கொக்குகள் துயரடைந்தன. இந்த இராட்சதப்பறவையை வெல்வது எப்படி எனத் தமக்குள் ஆலோசிக்கத்தொடங்கின.



சிலமைல்களுக்கப்பால் அம்புகள் வில்லுகளுடன் வேட்டைக்கு வந்த வேடர்கள் தண்ணீர் தாகத்தால் அலைந்து திரிவதை கொக்குகள் கண்டன.
"நாங்கள் குடியிருக்கும் இடத்தில் குளம் இருக்கும் என்பது வேடர்களுக்குத் தெரியும். ஆகவே நாங்கள் சத்தமிட்டுக்கொண்டு அவர்களுக்குத் தெரியத்தக்கதாய்ப் பறப்போம். அவர்கள் இங்கு வருவார்கள்!" என்று தங்களுக்குள் தீர்மானித்தபடி குளத்தைச்சுற்றிப் பறந்தன.

கொக்குகளைக்கண்டதும் வேடர்கள் குளக்கரையை நாடி வந்தார்கள். அவர்கள் தாகம் தீர்க்க முயன்றபோது அங்கிருந்த இராட்சதப்பறவையைக் கண்டார்கள். உடனேயே அதைக் கொன்றொழித்தார்கள்.
"இராட்சதப்பறவை இறந்துவிட்டது. இனிமேல் நாங்கள் சுதந்திரமாக வாழலாம்.எங்கள் இளைய சமுதாயத்திற்கு இனி அழிவில்லை!" எனச் சந்தோசப்பட்ட கொக்குகள் முன்பு தங்களைவிட்டுப் பிரிந்துபோன உறவுகளையும் கூட்டிவந்து ஒற்றுமையாக வாழலாம் என எண்ணி கடற்கரையோரம் பறந்துசென்று பார்த்தன.
"கடற்கரையில் சுதந்திரமாக வாழலாம். கடலே நமக்குச் சொந்தமாகும்!" என எண்ணி சொந்தக் குளத்தை விட்டுப்பிரிந்த கொக்குகள் கடற்கரையோரமாய் செத்துக் கிடப்பதைக் கண்டன.

— குப்பிளான் வை.யோகேஸ்.

---


சென்ற இதழில் இடம்பெற்ற
புதிர்களுக்கான விடைகள்.

1. ஆப்ரகாம் இலிங்கன்


கணக்குப் புதிர்கள்
முதலாவது புதிர் விடை.
24 + 8 = 32
24 4 8 − 32 = 2416

இரண்டாவது புதிர் விடை


5
7 3
6 4
2 9 1 8




இங்கே வித்தியாசமான 8தவளைகள் இருக்கின்றன. இவற்றில் 2 மட்டும் ஒரேமாதிரியானவை. அவைகள் எவை?



இலக்கமிடப்பட்டுள்ள புள்ளிகளை இணைத்துப்பாருங்கள்.



இங்கே 12 நட்சத்திரங்கள் 6 சதுரங்களை உருவாக்கியுள்ளன. இவற்றில் நீங்கள் 2நட்சத்திரங்களை வெளியே எடுத்துவிட்டு 2 சதுரங்களை உருவாக்கவேண்டும். எப்படி?

விடைகள் அடுத்த இதழில்!

**இணுவையூர் பவன்-கணபதிப்பிள்ளை**

முற்றத்து ஒற்றை வேம்பு எந்தவித சலனங்களும் இன்றி அமைதியாய் இருந்தது.தூரத்து பனைக்கூடலுக்குள் சூரியன்மெதுவாக எட்டிப்பார்த்தது. அதன் வெளிச்சம் குறைவாக தெரிந்தாலும் வெப்பம்மட்டும் இந்த கல்லுப் பூமியின் கைங்கரியத்தில் இருமடங்காக இருந்தது. குளிர்காலத்திலேயே நெருப்பைக் கக்கும் மண். இந்த சித்திரைமாதத்தில் சொல்லமுடியுமா?
வாசல் திண்ணையில் இருந்து வாசலைப் பார்த்தபடி பெருமூச்சுவிட்டாள் நித்தியகல்யாணி.
'என்ன ஒரு சூடு?'
முந்தானை எடுத்து முகம்துடைத்தாள். குடிக்கிற தண்ணிக்கே ஒண்டரை மைல் நடந்து போகிற ஊர். வேர்வை மாத்திரம் மழையில நனைஞ்ச மாதிரி இந்த காலமைநேரத்திலேயே....

# நாளைய விடியல்கள்

துள்ளித் திரிந்த அந்த கவலை இல்லாத பருவம்.
அதெல்லாம் மனதில் ஒரு பசுமையான நினைவு. அவ்வளவுதான்.
அன்று ஐயா, அம்மா, அண்ணன்மார், தங்கை என்று அன்பு உறவுகளின் பிடிக்குள் சிக்கி மகிழ்வாய் இருந்த காலத்தில் அவளுக்கு இப்படி ஏதும் கஸ்டதுன்பம் வரும் என யாரும் சொல்லியிருந்தால் ஊரே அன்று சொன்னவரை உண்டு இல்லை என்றாக்கியிருக்கும். அப்படி ஒரு சந்தோசமான இளம்பருவம். அவள் உறவுகளுக்குள் இனசனத்துக்குள் அவள்தான் அதிகம் படித்தவள். மூண்டு அண்ணைமாருக்கு பிறகு வந்த செல்லமகள் தகப்பன் சின்னையாவுக்கு. அம்மாதான் மூண்டுக்கு ஒண்டு அடுப்பும் நெருப்பும் என முடிவில் கவலைப்பட்டவவாம். ஆனா தங்கச்சி சரோ சனிச்ச நாளில இருந்து பிள்ளை, தங்கச்சி, நித்தியா, பெரியபிள்ளை எண்டு செல்லங்கொட்டி வளத்தது அவளைத்தானே.
'அயலட்டை சனம் எதிர்க்க பெரியபிள்ளையான பெட்டையை ஊர் தாண்டி பள்ளிக்குடம் அனுப்பினதுதான் இந்தப்பிழைக்கு கொண்டுவந்து விட்டிட்டுது!' எண்டு கனகாலம் தகப்பன் திட்டிக்கொண்டு இருந்தவர். பிறந்து வளர்ந்த அந்த பசுமையான கிராமத்தை விட்டிட்டு இந்த ஊருக்கு வந்ததே அவள் பருவம் தந்த காதல் உணர்வுகளின் வெளிப்பாடுதான்.
அவளை வேரோட கிளப்பி இந்த விடத்தில்தீவுமண்ணில பதியம்போட்டது ஊர்சனத்துக்கே தெரிஞ்சசங்கதி. அம்மா, ஐயா ஆக்கள் ஓரளவுக்கு பிள்ளை யெண்டு மனம் இரங்கினாலும் அண்ணன்மார் எல்லாம் விதண்டாவாதம் பிடிச்சவங்கள். அண்டுதுவக்கம் இருந்த கொதியில அப்புசெத்ததுக்குக்கூட அறிவிக்கேல்லை. எத்தினையோ நாளைக்குப் பிறகு அதுவும் தங்கம் கடிதம் போட்டுத்தான் விசயம் தெரியவந்தது. அதுக்குக்கூட பஞ்சலிங்கம் அதுதான் அவள் கணவன் அவளை சொந்த ஊருக்கு கூட்டிக்கொண்டு போகக்கேட்டும் அவன்அவமானப்படக்கூடாது எண்ட நினைப்பில பாசத்தை அடைச்சுக்கொண்டாள்.
காலந்தான் எவ்வளவு வேகமா போகுது.

பஞ்சலிங்கம் இருந்தவரைக்கும் அவளை உடம்பு நோக ஒரு வேலையோ இல்லாவிட்டால் மனசுநோக ஒருசொல்லோ சொன்னது கிடையாது. கடல் தொழிலுக்குப்போற ஆக்களோட போய் தலைமன்னாரில நிண்டுதான் தொழில் செய்தவர். கிழமையில ஒருநாளைக்கு திரும்பி வரேக்குள்ளை கைமுட்ட காசும் முகம்முழுக்க சந்தோசமும் நித்தியா நித்தியா எண்டு.

இனி அந்த நாள் திரும்பி வரப்போறதில்லை. எந்த நேரமும் தலைஇழுத்து பொட்டுவச்சு பளிச்செண்டு நிக்கவேணும். இல்லாட்டா அவுக்கெண்டு கோவம் வந்திடும் மனிசனுக்கு. இப்ப இருக்கிற நிலைமையில கண்டா என்ன செய்வார்?

'என்னை இப்பிடி இடையில கையவிட எண்டோ என்ர ராசா இப்பிடி இழுத்தடிச்சு இஞ்சை கொண்டு வந்தனீங்கள்?'

அவளையறியாமல் கண்கள் நீர் வடித்தது.

ஊரில இருக்கிற வரைக்கும் ஒருவேலை செய்யத்தெரியாது. ஓ.எல் (O/L) எடுக்கிறவரைக்கும் படிப்புமட்டும்தான். வேலைசெய்யவிட்டா பிள்ளையின்ர படிப்பு பழுதாபோமெண்டு அம்மா குசினிப்பக்கம் வரவிடா. மிச்ச நேரத்துக்கு முன்வீட்டு தங்கம், பக்கத்துவீட்டு திலகம்மாமியின்ர செல்லா. மூண்டு பேரும்சேர்ந்து சொக்கான்வெட்டிறதும் தாயம்விளையாடுறதும் பொழுது போக்கு. இருந்தவள் இவளவை இரண்டுபேரோட மட்டும் சினேகம் வச்சிருந்தா ஏன் இப்பிடி தனியகிடந்து துன்பப்படவேண்டிவரப்போகுது. செல்லாவின்ர தூரத்து சொந்தமெண்டு அவளவை வீட்டில தங்கியிருந்து மணியம் கராச்சில வெயின்ரர்வேலைக்கு போய்வந்த பஞ்சலிங்கத்தை சந்திச்சு சினேகமானதுவரைக்கும் மற்றஆக்கள்மாதிரித்தானே அவளின்ரவாழ்க்கையும் இருந்தது. ஏன் பிறகுகூட நாட்டு பிரச்சனையால சின்னச்சின்ன கஸ்டங்கள் பற்றாக்குறையள் இருந்தாலும் சந்தோசமான சீவியம்தானை. உழைப்பு ஏதோ மட்டுமட்டெண்டாலும் சீவியத்தை இழுக்க போதுமாயிருந்தது. ஆனா மிச்சம்பிடிக்கத்தான் முடியாமபோச்சு. காதுத்தோடு சின்னனில அப்பு வாங்கித் தந்தது. ஒருசோடி காப்பு, ஒரு சங்கிலி, ஒரு அரைப்பவுண் மின்னி இதெல்லாம் அந்தக் கஸ்டத்திலையும் பஞ்சலிங்கம் செய்துபோட்டது. இதுதான் அவளுக்கு இருந்த சொத்து. மற்றப்படி இருக்கிற இந்த கல்வீடோ கொட்டிலோ எண்டு சொல்லேலாத வீடு பஞ்சலிங்கத்தின்ர பேத்தியாரின்ர தமக்கைக்கிழவி ஒண்டு இருந்தது. மனிசிக்கு பிள்ளை குட்டி இல்லை. இவன்தான் பாத்தது. நித்தியகல்யாணி கலியாணம் முடிச்சவுடன இந்த வீட்டைத்திருத்தி குடிவந்தது. கிழவி அதுக்கு முன்னம் செத்துப்போச்சு. சொத்துக்கெண்டு ஒருத்தரும் உரிமை கொண்டாடாமல் விட்டதில வீட்டுப்பிரச்சினை இல்லாமப்போச்சு.

வீட்டுப்பிரச்சனை இல்லையெண்டாலும் ஒண்டில்லை ரெண்டு வயிறு இருக்கே. கஸ்டப்பட்டசனம் எண்டாலும் நேரத்துக்கு பசிவரத்தான் செய்யும். துணிமணிக்கு தேவை இருக்கத்தான்செய்யும். அடிப்படைக்கு மேல உள்ள ஆடம்பரத்திலதான் ஏழைபணக்காரன் எண்டு வித்தியாசம். மற்றும்படி ஒண்டுதானை. வசதிப்படி தேவையள் கூடும் குறையும். நேற்றைக்கு எண்ட மாதிரி கிடக்கு. ஒருமாதம் ஓடிப்போச்சு. தொழிலுக்கெண்டு போனவரை பெட்டிக்குள்ளதானை கொண்டுவந்து சேத்தினம். ஆழக்கடலுக்குக்கூட போறேல்லை. ஆமி, நேவி தடுத்ததில கரைய அண்டித்தான் தொழில் செய்தது. அதையும் பொறுக்காம நாசமாய்ப்போன நேவி என்ர தலையில இப்பிடி இடிவிழுத்திப் போட்டாங்கள். இருந்த ஒரு சோடி காப்பும் அவரை வழியனுப்பி வைக்கப்போக சங்கிலிதான் இவ்வளவு நாளும் வயிறை



காயவிடாம வைச்சிருந்தது. பிறந்திருக்கிறதும் துன்பப்பட வெண்டெல்லே என்ர வயித்தில வந்துபிறந்திருக்கு. இனி என்னெண்டு சீவியம் போகப் போகுது எண்டதுதான் விளங்கேல்லை. எவ்வளவு கஸ்டப்பட்டு என்ன? மரியாதை மானமா அன்பா காப்பாத்தின மனிசன்.இப்ப கொஞ்சம் கஸ்டம் கூடினதே. இதுவரைக்கும் என்னையும் அவரையும் ஒரு மனிசரெண்டே மதிக்காம இருந்த அண்ணையவைவிட்ட போய் பல்லைக்காட்டிறதைவிட சாகலாம். எனக்கெண்டு இந்த குஞ்சு வந்திராட்டி செத்துத்தான் இருப்பன். இந்தப்பிள்ளையை எப்படியெல்லாம் வளக்கோணும் எண்டு அவர் ஆசைப்பட்டார். அதுக்காகவே என்ர உயிரையும் வைச்சிருக்க வேண்டிக் கிடக்கே. பக்கத்துவீட்டில இருக்கிற கனகம்மா குஞ்சிதான் இப்ப எனக்கு இராத்துணை. எனக்கு ஆறுதலா இருக்கிற ஒரே சென்மம். மன்னார் ரவுணுக்குப்போய் சாமான் வாங்கிக் கொண்டு வந்து இஞ்ச வித்துத்தான் சீவியம் நடத்துது. இவ்வளவுநாளும் எனக்கு ஆறுதல் சொல்லேக்குள்ள ஏதும் ஒரு வருமானத்தை தேடிக்கொள்ளச் சொல்லும். 'இல்லாட்டா உன்ர நிலைமை என்ன விறுத்தத்துக்கு எண்டு உனக்குத் தெரியும்தானை. நடந்ததை நினைச்சு கவலைப்பட்டொண்டு இருந்தாமட்டும் எல்லாம் சரியாகாது பிள்ளை. இனி என்ன நடக்க வேணும் எண்டதை யோசி. நடைமுறை இட்டு இடைஞ்சலுகளுக்கு ஒளிச்சோட ஏலுமே?'

அதைத்தான் ரெண்டு மூண்டுநாள் யோசிச்சு ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். பிள்ளை ரூபன் அழுததில யோசின தடைப்பட்டுது. இருந்த ஒரு சொட்டு பாலை சீனி போடாம கரைச்சுக் குடுத்தாள். தாயின்ர கஸ்டத்தை தெரிஞ்சோ இல்லை பசியோ பிள்ளை பொச்சடிச்சு குடிச்சிட்டு விளையாட துவங்கிவிட்டுது.

முந்தநாள் ராத்திரி கனகம்மா குஞ்சி விசாரிச்சா 'பிள்ளை என்ன யோசிச்சு வைச்சிருக்கிறை'எண்டு.

'பிள்ளையை என்ன செய்யிறதெண்டுதான் கவலை'

குஞ்சி சொன்னா —


ஒவ்வொருநாளும் இல்லைத்தான. கிழமைக்கு ஒருநாள் ரெண்டுநாள் தான். அந்த நேரம் என்ர கடைசி பாத்துக்கொள்ளுவாள் எண்டு.

இதைக் கேட்டதும் நித்தியாவுக்கு ஒரு ஆறுதலாக் கிடந்தது. பள்ளிக்கூட காலத்தில மனையியல் பிறக்ரிகலுக்கு எண்டு அப்பளம் செய்யிறது சும்மா சோதினைக்காண்டி படிச்சது. இப்ப உதவியா இருந்தது. ரெண்டுநாளும் செய்து காயவைச்சு பத்து பதினஞ்சா கட்டி வைச்சிருக்கிறாள். காலமை எழும்பி தன்ர வீட்டை போட்டு வாறன் எண்டு போன கனகம்மா குஞ்சிக்கு காவல் இருக்கிறாள். அவதான் இந்தபுத்தி சொன்னது.

'அப்பளம் செய்தா மன்னாரில இருக்கிற சாப்பாட்டு கடையளுக்கும் பலசரக்கு கடையளுக்கும் குடுக்கலாம். கொஞ்சநஞ்ச வரும்படி கிடைக்கும். குடும்பமும் ஓடும். அதோட நீயும் எந்த நேரமும் குந்திப்பிடிச்சு அழுதுகொண்டும் ஆற்றையன் கைய எதிர்பாக்க வேண்டியும் இராது'

அவளுக்கும் அது சரியாத்தான் தெரிந்தது. குஞ்சியும் அவவின்ர மேளும் வருவது தெரிஞ்சது. மகனைத் தூக்கிக் கொஞ்சிப் போட்டு குஞ்சியின் மகளிட்டைக் குடுத்தாள். கதவைப் பூட்டி திறப்பையும் குஞ்சியின் மேளுட்டையே குடுத்திட்டு சீலையை சரி செய்து கொண்டாள். அப்பளம் அடங்கிய கடகம் அவள் தலையில் கம்பீரமாக ஏறி அமர்ந்து கொண்டது. பிள்ளை ரூபன் கையசைத்துச் சிரித்தான். தாயின் எண்ணங்களைத் தெரிந்து கொண்டிருப்பானோ? நாளைய விடிவுகளின் நம்பிக்கையோடு நடக்கத் தொடங்கினாள்.

சூரியனும் மெல்ல உயர்ந்து கொண்டிருந்தான். அவள் நம்பிக்கைபோல.



( ஐப்பசி மாத இதழ் அட்டைப்படத்துக்கென வந்த மற்றொரு சிறுகதை. )

தோமாஸ் வெல் எழுதிவரும்

**பிறமொழியும் கற்போம்**

டொச் தமிழ் பாடத் தொடர்

அடுத்துவரும் இதழ்களில் இடம்பெறும்.

— இந்துமகேஷ்.

# இரவென்பது இருட்டல்ல.

7.

அந்தச் சிலிர்ப்பு அடுத்த சில கண நேரத்துக்குத்தான்.

எதிரில் நின்ற இளைஞர்களில் ஒருவன் இவரை உறுத்தலாய்ப் பார்ப்பது தெரிந்தது. இன்னொருவன் அவனது நெஞ்சில் கையை வைத்து அவனைப் பின்னுக்குத் தள்ளினான்.

சுப்பையாவை நெருங்கி வந்தான்.

அவரருகே வந்து விழுந்த கிடந்த பியர் ரின்னை எடுத்துக்கொண்டே "மன்னியுங்கள்!" என்றான்.

அருகில் இருந்த தொட்டிக்குள் அதைப்போட்டுவிட்டு நண்பர்கள் பக்கம் போனான். எறிந்தவனுக்கு என்ன கோபம் யார்மீது கோபம் என்று தெரியவில்லைதகாதவார்த்தைகளால் ஒட்டுமொத்தமாக அகதிகளைத் திட்டிக் கொண்டிருந்தான்.

'இதில் தவறென்ன?' என்று சுப்பையா நினைத்தார்.

'இது அவனது சொந்தநாடு. சுதந்திர நாடு. இங்கே அந்நியர்கள் — அவர்கள் எதற்காக வந்து குடியேறியிருந்தாலும் — அவர்களால் தங்கள் வாழ்வு பாதிக்கப்படும் என்று அவன் அச்சப்படுகிறான். பாதிப்பு ஏற்பட்ட பிறகு விபரீதமானவிளைவுகளை ஏற்படுத்துவதைவிட இதை முளையிலேயே கிள்ளியெறிவது நல்லது என்று அவன் நினைக்கிறான். ஆனால் அதை எப்படிச் செயல்படுத்துவது என்றுதான் அவனுக்கு விளங்கவில்லை. அதனால்தான் கூச்சல்போட்டு எவரையாவது முட்டிமோதி தன் சினத்தைத் தணித்துக்கொள்ள அவன் விரும்புகிறான். வயதும் இளமையும் அவனுக்கு வேகத்தைக் கொடுக்கிறது. அந்தவேகத்துக்கு என்னால் ஈடுகொடுக்க முடியாதென்பதல்ல. ஆனால் நியாயபூர்வமாக எனக்குத் தெரிகின்ற அவனது கோபத்துக்கு எதிராக எந்த நியாயத்தை நான் வைக்கமுடியும்?'

ஐயா ஊரை நினைத்தார்.

ஆளவந்த வெள்ளைக்காரனை அங்கிருந்தே விரட்டியடிக்க முடிந்தது. ஆனால் அடுத்தவீட்டுக்காரனுக்குப் பயந்து நாட்டைவிட்டே புறப்பட்டுவிட்ட இந்த நிலைமை ஒரு பக்கம் எரிச்சலூட்டுவதாக இருந்தாலும் மறுபக்கம் வியப்பானதாகவும் இருந்தது.

'இந்த உயிரை இப்படிப் பாதுகாத்து என்ன சாதிக்கப்போகிறேன் நான்? இத்தனைகால வாழ்க்கையில் ஒரு சராசரி மனிதனாய்மட்டும் வாழ்ந்து முடித்த இந்த வாழ்க்கையில் இனியேனும் சாதிக்க ஏதாவது இருக்கிறதா என்ன?

மழைத்துளிகள் மெல்லச் சடசடத்தன...
ஐயா மெதுவாக எழுந்தார். இப்போது மழைவருமென்று அவர் எதிர்பார்க்கவில்லை.
ஒரேநாளில் பல்வேறு காலநிலைகளையும் காட்டும் நாடு.
வெய்யிலோடு வெளியேபோனால் சில நேரங்களில் மழையில் நனைந்து கொண்டு வரவேண்டியிருக்கும். மழைவரும் என்று குடையைக் கையில் எடுத்துக்கொண்டு போனால் வெய்யிலில் வெந்து வரவேண்டியிருக்கும்.
சூழலுக்கேற்ப வளைந்துகொடுக்கத்தெரிந்தவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். தாம் நினைத்ததே சரிஎன்று கடைசிவரை வாதிடுகிறவர்கள் சஞ்சலப்பட்டுப் போகிறார்கள்.

ஐயா மெதுவாக எழுந்து வீட்டைநோக்கி நடந்தார்.
இப்போது தெருவில் அமைதி வந்திருந்தது. பக்கத்துவீடுகளின் யன்னல்கள் வழியாக வெளிச்சம் வர ஆரம்பித்திருந்தது.
இவரது வீட்டின் அறைப்பக்கம் பார்வையைத் திருப்பினார் வெளிச்சம் இல்லை. யன்னலினூடே இவரது வீட்டினுள் இருள்மண்டிக்கிடப்பது தெரிந்தது. இவர் உள்ளே போனால்தான் அங்கிருந்தும் வெளிச்சம் வரும்.
வீட்டின் வெளிக் கதவைத்திறப்பதற்காகத் திறப்புக் கோர்வையை எடுக்க கால்சட்டைப் பைக்குள் கையைவிட்டார் சுப்பையா.
திடீரென இருட்டு....
எல்லா விளக்குகளும் ஒரே நேரத்தில் பட்டென அணைந்தாற்போல்....
கண்களுக்கு முன்னால் அவருக்கு எதுவுமே தெரியாத இருட்டு....
என்ன நடந்தது?
இந்தக் காரிருளிலும் எங்கிருந்தோ சிரிப்புச் சத்தங்கள் கேட்கின்றன.
குழந்தைகள், இளம்பெண்கள் குதூகலித்துச் சிரிக்கிறார்கள்....
தூரத்தே...சற்றுத் தூரத்தே....
யாரது...யாரவர்கள்? ....
தெரியாது...
யாராயிருந்தாலென்ன...எனக்கென்ன... ஆனால் நான் போகவேண்டும்...
என் வீட்டுக்கு நான் போகவேண்டும்....
எப்படி...?
நின்று நிதானிக்க அவரால் முடியவில்லை...
திடீரென அவரது உடற் பலமெல்லாம் தளர்ந்து எலும்புக் கூடற்ற வெறும் நரம்புகளாலான தேகத்துடன் நிலைகொள்ள மாட்டாமல் மெள்ள மெள்ளக் கீழே சரிந்து கொண்டிருந்தார் அவர்...
இருந்தாற்போல் —
மின்னலின் வேகத்தோடு ஒரு ஒளிக் கீற்று அவரது கண்களுக்கெதிரே பளிச்சிடுகிறது...
இந்த வெளிச்சத்தில் வீட்டுக்குப் போய்விடலாம்....
அவர் வேகமாய் எழுந்து விரைந்து நடக்கிறார்.
இந்தவேகம் எப்படி வந்தது...?
காற்றோடு கலந்துவிட்டேனா நான்?

"என்னப்பா...?"
"என்ன...?"
"என்ன இது...இன்னும் நீங்கள் நித்திரை கொள்ளேல்லையே...?"
"இல்லை... நீ படு!"
"ஏனப்பா...ஏதேனும் கெட்ட கனவுகினவு கண்டியளே...?"
"ஒண்டுமில்லையப்பா...படு!"
"நேரத்தைப் பாத்தியளே... மணி ஒண்டரை.... இப்பிடி லைற்றையும் போட்டுக்கொண்டு முளிச்சுக்கொண்டிருந்தால் விடிய வெள்ளண எழும்பி வேலைக்குப் போறேல்லையே...?"
"சரி லைற்றை நூர்த்திட்டன் ...பேசாமல் நித்திரை கொள்....!"
"என்னபிடிச்சுதோ உங்களுக்கு...? வயசு போகப் போக மனிசருக்கு அறளை பேந்திடும் எண்டது மெய்தான்போலைக் கிடக்குது!"
"எனக்கு மட்டுமா வயசுபோகுது... எல்லாருக்கும்தான் போகுது. போகும்...!நீ பேசாமல்கிட... இல்லாட்டில் நான் எழும்பி வெளியிலை போயிடுவன்....!"
"..............."
"இப்ப ஏனப்பா அழுகிறீர்...?"
"இதுக்குத்தான்....இதுக்குத்தான் சொல்லுறது... எப்பவும் குடும்பம் எண்டால் அதிலை நாலஞ்சு புள்ளைகுட்டியளும்வேணுமெண்டு...!"
"இப்ப ஏனப்பா...?"
"இல்லை...இல்லை...நான்மலடிமலடிதான்....எனக்கு ஒரு பெடியனோ பெட்டையோ பிறந்திருந்தால் இப்ப நீங்கள் என்னை வெருட்டுவியளே...?"
"நான் உன்னை வெருட்டினனா...? எப்ப..?"
"இப்பதானை சொன்னியள்.... வெளியிலை போயிடுவன் எண்டு...! எனக்கொருபிள்ளை இருந்தால் எனக்கென்னபயம்...? எனக்கென்ன கவலை...!"
"சரி... நடக்காத விஷயங்களைப்பற்றி ஏன் இப்ப....? உனக்கு நான் பிள்ளை... எனக்கு நீ பிள்ளை....!"
"விடுங்கோ என்னை! உங்கடை மடிக்கு என்னை இழுத்தாப் போலை உங்கடை ஒளிவு மறைவெல்லாத்தையும் நான் ஒப்புக் கொண்டிருவனோ?..
"ஒளிவு மறைவோ...உன்னட்டையோ...? அதுகும் நான்...?"
"பின்னை என்ன? இவ்வளவு நேரமாய் நீங்கள் நித்திரை கொள்ளாமல் இருக்கிறதுக்கு ஏதோ ஒரு காரணம் இருக்கும் .. சொல்லுங்கோ!"
"கனக்க ஒண்டுமில்லை... சும்மா ஒரு கனவு கண்டன்....!"

*"கனவோ... என்ன கனவு...?"*
*"போன மாதம் பூவரசு படிச்சனியே...?"*
*"ஓம்...ஏன்...?"*
*"அதிலை ஒரு கதை வருகுது...!"*
*"ஓம்....இந்துமகேஷின்ரை கதை...!"*
*"படிக்கிறனியே...?"*
*"சும்மா மேலோட்டமாய்த் தட்டிப்பாக்கிறதுதான்!"*
*"அதுதானை... நீயும் ஒரு இரசிகையாய் இருந்தால் நானும் ஒரு எழுத்தாளனாய் இருந்திருப்பனே....!"*
*"சும்மா அலட்டாமல் சொல்லுங்கோ...அந்தக் கதைக்கும் உங்கடை கனவுக்கும் என்ன சம்பந்தம்?"*
*"ஏன் ரெண்டையும் போட்டுக்குழப்பிறை.... அது வேறை....இது வேறை....!"*
*"சரி சொல்லுங்கோப்பா....!"*
*"அந்தக் கதையிலை ஒரு வயசுபோனாள் வருகுதெல்லே...!"*
*"ஓமோம் சுப்பையர்...."*
*"அந்தாளைப்பற்றி எனக்கு நிறைய விஷயம் தெரியும்....!"*
*"என்ன தெரியும்...? கதை இன்னும் முடியேல்லையே..."*
*"என்னெண்டு முடியும்....? நான் சொல்லாட்டில் கதையே இல்லை!"*
*"என்னப்பா புதிர்போடுறியள்....! எனக்கு நித்திரை வருகுது!"*
*"சரி இப்ப நித்திரைகொள்...நாளைக்கு மிச்சத்தையெல்லாம் சொல்லுறன்!"*

இரவு என்பது இருட்டல்ல
முதற்பகுதி முற்றிற்று.
(இரண்டாவது பகுதி விரைவில்)

---

**இளைதுன்**

மாத இதழ் நடாத்திய
கவிதைப்போட்டியில்
முதல் மூன்று பரிசுகளையும்
பெற்றுக் கொண்டவர்கள்

1. ரி. கருணாகரன் பேர்லின்.
2. செல்வி செ. ஜெயச்செல்வி கனடா
3. திருமதி சுமதியான் ஜேர்மனி.

---

சிந்திக்கும் திறன் கொண்டோர்க்கும்........
சிந்திக்கும் திறன் விழைவோர்க்கும்......
சந்திக்கும் பாலம் போல.....
சிந்தித்தே ஆக்கி வைத்த ......
சிந்திக்க வைக்கும் நூலே.......

எழிலனின்...

## புதியதல்ல.... புதுமையுமல்ல.......

நமக்குள் உழன்று கொண்டிருக்கும் எத்தனையோ உண்மைகளை உணராமல் – உணர முயலாமல் நாமிருந்துகொண்டிருக்கின்றோம். நமது சிந்தனை இருட்டில் மறைந்துநிற்கும் பொய்மையை இனங்காட்ட வேண்டும். இல்லையேல் மின்மினிப் பூச்சிக்கும் விட்டம் கொண்டலை நுளம்பிற்கும் வித்தியாசம் தெரியாது மாட்டிக் கொள்வோம். பொதுத் தொண்டு செய்வோரில் போலிகளின் ஆக்கிரமிப்பு மலிந்து இருப்பதால் மக்கள் திசை திருப்பப்படுகின்றார்கள்.
வைரத்தை அடையாளங்காண விடாதவர்கள் – கண்ணாடித்துகள்களைக் காட்டி உங்களை ஏமாற்றுகிறார்கள். சமுதாயத்தின் பெயரைச் சொல்லித் தம்மை வளர்த்துக் கொள்ளும் இந்தப் போலிகளை அடையாளங்காண வேண்டுமென்றால் உண்மைக்குமேல் இவர்கள் போர்த்திவைத்திருக்கும் பழியான – பொய்யான கூடாரத்தை நாம் அகற்றிவிட்டு உள்நுழைந்து உண்மையைத் தேட வேண்டும். அதைத்தான் இந்நூல் உங்களைச் செய்யத் தூண்ட விழைகின்றது.
சரியாகச் சிந்தித்திடும் ஆற்றல் தனிநபர் சொத்தன்று. நம் ஒவ்வொருவரினதும் சொத்தது. மற்றவர் கருத்துக்களை மனப்பாடம் செய்துவிட்டு அவற்றை நம்மிடம் திருப்பிச் சொல்லிப்புகழ்தேடும் போலி உலகமிதைப் புரிந்து கொள்ளுங்கள்.
சிந்தனை பலவீனம் அயநலமிகளின் வெற்றிக்கே வழி செய்யும். நாம் நம்மை உணர்ந்து கொண்டால் நம்மை ஏய்ப்பவனை விரட்டிவிட்டு நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

சமுதாயக் கள்ளர்களை இனங்காண – சமுதாயத்தின் நன்மைக்கு வழிதேட –
தனிநபர் சிந்தனைத்தெளிவொன்று மட்டுமே உதவ முடியும்.

அதற்கு உங்களை ஊக்குவிக்கும் ஒரு சின்னஞ்சிறு தூண்டுகோலே

## புதியதல்ல.....புதுமையுமல்ல......

கவிதைகள் – கட்டுரைகள் – கருத்துச் செறிந்த ஆன்றோர் அணிந்துரைகள் நிறைந்து வெகு விரைவில் வெளிவரவிருக்கின்றது.

வாசகர்கள் – எழுத்தாளர்கள் – கவிஞர்கள் அனைவரும் கண்டிப்பாக வாசிக்க வேண்டும்.

உங்களின் பிரதியை முன்கூட்டியே பதிந்து கொள்ள பூவரசு நற்றமிழ் ஏட்டுடன் எழுதித் தொடர்பு கொள்ளுங்கள்

காவியம் பாடிப்பாடிப் பொழுதினை இழந்தது போதும்
பாவிகள் நம்மை ஏய்க்கா நன் நிலை காணல் வேண்டும்.
கோவிலும் குளமுமல்ல சிந்தனைத் தெளிவு ஒன்றே
நாவிலும் நடக்கை எல்லாம் நல்லதை நாடச் செய்யும்.

போனவர் தந்து சென்ற நல்லவை நம்மைச் சேர
நானெனின் இதயம் சொல்லும் உண்மையை மட்டும் ஏற்பேன்
ஏனென எதையும் கேட்பேன் பொய்யரை இனமும் காண்பேன்
என்னினம் ஏய்த்தல் செய்ய எம்மிலுள் கள்வரை விடேன் .

இது என் கருத்தல்ல...உங்கள் உள்ளத்துள் உறைந்துள்ள உண்மையான கருத்து. அதனைத் தட்டி எழுப்ப உங்களுக்காக வெளிவருவதே புதியதல்ல ......புதுமையுமல்ல....

# பூவரசு

ஐந்தாவது ஆண்டு நிறைவுக்

# கலை இலக்கிய மாலை

20.01.1996 சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு
BREMEN, HAUS IM PARK மண்டபத்தில்!

பூவரசு 5வது ஆண்டு நிறைவுப் போட்டிகளில்
**வெற்றிபெற்றவர்களுக்கான
பரிசளிப்பு.**

பூவரசு இனிய தமிழ் ஏட்டின்
*முன்னணிக் கவிஞர்கள் பங்குகொள்ளும்*
**"இளைய தலைமுறையே!
எழுந்து வா... சொல்கின்றேன்!"**
கவியரங்கு.



இனிய தமிழ் ஏடு.

*இளந்தளிர்கள் பங்கு கொள்ளும்*
**"நினைவு நல்லது வேண்டும்."**
(இசைநாடகம்)

மெல்லிசைப் பாடல்களைச் சுமந்து வரும்
**இசைத்தென்றல்.**

*மற்றும் சில சிறப்பு நிகழ்ச்சிகளுடன்.
பூவரசு நம் தமிழ் அன்னைக்குச் சூடும்
கலை இலக்கிய மாலை இது!*

***எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ் மொழி!
என்றென்றும் வாழியவே! என்றென்றும் வாழியவே!***

Stadt-
Bibliothek
Bremen

**வாசகர்களை வரவேற்கிறது~**
பிறேமன் பொதுநூலகத் தமிழ்ப்பிரிவு!

**இப்பொழுது**
**பிறேமன் பொதுநூலகத் தமிழ்ப்பிரிவில்**
**மேலும் பல புதிய தமிழ்நூல்கள்....**
**உங்களுக்காகக் காத்திருக்கின்றன!**

Walliser Straße 125,
Osterholz bibliothek,
புதியமுறையில் திருத்தியமைக்கப்பட்டு
புதிய நூல்களுடன்
உங்களை வரவேற்கிறது!

**வாசிப்பதால் நாங்கள்**
**அதிகமாய் அறிகிறோம்**
**அதிகளவு நூல்கள்**
**நம் மொழிவாழ உதவும்!**